வானவில்

VAANAVIL

இதழ் 176 ஆவணி 2025

ISSUE 176 August 2025

# கல்விச் சீர்திருத்தம் எதற்காக?




தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கல்வித்துறையில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள சீர்திருத்தங்கள் கல்வித்துறை வட்டாரங்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் பலத்த சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

பொதுவாக இலங்கையில் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் கல்வித்துறையில் கை வைப்பதை ஒரு மரபாக கைக்கொண்டு வந்துள்ளன. தற்போதைய அரசாங்கமும் அதற்குத் தப்பவில்லை போலத் தோன்றுகிறது.

நாடு பிரித்தானியரிடம் இருந்து 1948 பெப்ருவரி 4 ஆம் திகதி சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து கல்வித்துறையில் இதுவரை பல மாற்றங்கள் செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இன்னமும் கூட நாட்டுக்குப் பொருத்தமான கல்வி முறையொன்றை எந்தவொரு ஆட்சியாளர்களாலும் உருவாக்க முடியவில்லை.

சுதந்திரத்துக்குப் பின்னர் பல ஆண்டுகளாக பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் வகுத்த கல்வி முறையே இலங்கையில் நடைமுறையில் இருந்து வந்தது.

பொதுவாக பிரித்தானியர் தமது காலனி நாடுகளில் கல்விக் கொள்கையை உருவாக்கும் போது இரண்டு விடயங்களைத் திட்டமிட்டுச் செய்தனர்.

ஒன்று, அவர்கள் வகுத்த கல்வி முறை அவர்களுக்குச் சார்பான விசுவாசிகளை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

இரண்டாவது, நாட்டில் ஒரு சிறு தொகையினரான ‘வெள்ளைச் சட்டை’ அரச ஊழியர்களை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

நாட்டின் யதார்த்த நிலைமைகளோ, தேவைகளோ எமது கல்வி அமைப்பின் கூடாக மாணவர்களுக்குக் கற்பிக்கப்படவில்லை.

உதாரணமாக, வரலாறு என்றால் பிரித்தானியாவின் வரலாறும், புவியியல் என்றால் பிரித்தானியாவின் புவியியலும், பொருளாதாரம் என்றால் பிரித்தானியாவை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவப் பொருளாதாரமும்தான் கற்பிக்கப்பட்டன. வரலாறு என்ற போர்வையில் சமுதாய மாற்றங்களை ஏற்படுத்திய மக்கள் போராட்டங்களைக் கற்பிப்பதற்குப் பதிலாக, மன்னர்களின் வரலாறே படிப்பிக்கப்பட்டது.

அதேபோல, கலை இலக்கியப் பாடங்களில் மேற்கத்தைய மக்களின் நாகரிக வளர்ச்சியும், இந்திய கலை – இலக்கியப் பண்புகளுமே கற்பிக்கப்பட்டன.

இலங்கையின் வரலாறோ, புவியியலோ, பொருளாதாரமோ, கலாச்சாரமோ கற்பிக்கப்படவில்லை.

இடையிடையே உருவான தேசியவாத அரசுகள் சில கல்வித்துறையில் சில மாற்றங்கள் செய்த போதிலும், அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக இலங்கை மக்கள் நடத்திய போராட்டங்கள் சிங்கள – பௌத்த தேசியவாதத்தின் எழுச்சியாகவே பாடத்திட்டங்களில் சித்தரிக்கப்பட்டன.

சில சந்தர்ப்பங்களில் தேசிய ஐக்கியம் என்ற பெயரில் சில பாடங்கள் கற்பிக்கப்பட்டது உண்மையே. உதாரணமாக, இலங்கையின் தேசிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களாக அன்றிலிருந்து இன்று வரை மூவின மக்களையும் சேர்ந்த அநகாரிக தர்மபால, ஆறுமுக நாவலர், சித்தி லெப்பை போன்றோர் குறிப்பிடப்பட்டு வருகின்றனர்.

இவர்களது தேசியவாத செயற்பாடுகள்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# பல்துருவ உலகிற்கு அடிகோலும் பிரிக்ஸ் அமைப்பு

Strengthening Global South Cooperation for More Inclusive and Sustainable Governance என்ற கருப்பொருளின் அடிப்படையில், ஜுலை 6–7ந் திகதிகளில் ரியோ டி ஜெனீரோவில் (Rio de Janeiro) நடைபெற்ற 17 ஆவது பிரிக்ஸ் உச்சிமாநாடு வெற்றிகரமாக முடிந்துள்ளது. இந்த மாநாட்டின் பின்னர் உலகளாவிய அரசியல் பொருளாதார அமைப்பில் பிரிக்ஸ் (BRICS) ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தாக்கத்தை மேற்குநாடுகள் நன்கு உணரத் தொடங்கியுள்ளன. இதன் வெளிப்பாடாகவே, பிரிக்ஸ் அமைப்பு நாடுகளுக்கு கூடுதலாக 10% வரி விதிக்கப்படுமென அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத்தியுள்ளார்.

ட்ரம்பின் அச்சுறுத்தலுக்கு சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங், “வர்த்தகம் மற்றும் வரிவிதிப்பு போர்களில் வெற்றியாளர்கள் இல்லை. அதிகளவில் வரி விதிக்கும் போக்கு முன்னேற்றத்துக்கான எந்த வழியையும் வழங்காது” என்று பதிலளித்துள்ளார். தற்போது பிரிக்ஸ் தலைமையை வகிக்கும் பிரேசில் நாட்டின் ஜனாதிபதி லூலா டா சில்வா, “உலகம் மற்றொரு பேரரசரை விரும்பவில்லை” என ட்ரம்பின் அச்சுறுத்தலுக்கு கடுமையாக எதிர்வினையாற்றியுள்ளார்.

மேற்கத்தைய நாடுகளின் இரட்டை நிலைப்பாடுகள் மற்றும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் ஒதுக்கி வைக்கப்படும் நடைமுறைகள் மீதான விரக்தியிலேயே பிரிக்ஸ் உருவாகி மிகவும் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றது. கடந்த 3 தசாப்பங்களாக நடைமுறையிலுள்ள உலகளாவிய ஒற்றைத்துருவ ஆளுகை விதிகளை மாற்றி, பல்துருவ உலகிற்கு இட்டுச் செல்வதும், ஐக்கிய நாடுகள் சபையை மிகவும் ஜனநாயகமானதாக, பிரதிநிதித்துவமானதாக, திறமையானதாக மாற்றுவதும், அதன் முக்கிய முடிவெடுக்கும் அமைப்புகளில் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதும் பிரிக்ஸ் அமைப்பின் குறிக்கோள்களில் பிரதானமானவையாகும்.

2009 ஆம் ஆண்டு ஜுன் 16ந் திகதி பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய 4 நாடுகளுடன் ரஷ்யாவில் தொடங்கப்பட்ட பிரிக்ஸ் கூட்டமைப்பு, தற்போது தென்னாபிரிக்கா, எகிப்து, எதியோப்பியா, இந்தோனேசியா, ஈரான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளையும் இணைத்து மொத்தம் 10 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. மேலும், பெலருஸ், பொலிவியா, கியூபா, கஜகஸ்தான், மலேசியா, நைஜீரியா, தாய்லாந்து, உகாண்டா, உஸ்பெகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய 10 நாடுகளை பங்காளிகளாவும் பிரிக்ஸ் அமைப்பு கொண்டுள்ளது.

8.01 பில்லியன் உலக மக்கள் தொகையில் பிரிக்ஸ் நாடுகள் கூட்டாக சுமார் 4.45 பில்லியன் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. (இது உலக மக்கள் தொகையில் 55.6% ஆகும்) பிரிக்ஸ் நாடுகளின் பொருளாதாரம் உலகளாவிய ஜி.டி.பி(GDP)யில் 42.2% பங்களிக்கின்றன. இது அவர்களின் குறிப்பிடத்தக்க பொருளாதார பலத்தைப் பிரதிபலிக்கிறது. அதாவது பலமான நுகர்வோர் சந்தைகள் மற்றும் தொழிலாளர்கள் மக்கள் தொகையைக் கொண்டுள்ளதால், சர்வதேச பொருளாதார ஒழுங்கை மறுவடிவமைத்து உலகளாவிய பொருளாதார விரிவாக்கத்திற்கு பிரிக்ஸ் படிப்படியாக தளமமைத்து வருகின்றது.

தெற்குலக நாடுகளின் (Global South) தலைமையிலான பிரிக்ஸ் அமைப்பு பற்றி, மேற்கத்திய கோர்ப்பரேட் ஊடகங்கள் அடிக்கடி அதனைத் நிராகரித்தும், தாழ்த்தியும், ஏளனம் புரிந்தும் செய்திகளை வெளியிடுகின்றன. மேற்கத்திய நாடுகளை மிஞ்சும் வகையில் பிரிக்ஸ் வளர்ந்து வருவதை பொறுக்க முடியாமல், மேற்கத்தைய நாட்டு மக்களை திசை திருப்புவதற்காகவே அவை இவ்வாறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அதேவேளையில் அமெரிக்க அரசாங்கம், பிரிக்ஸின் விரைவான வளர்ச்சியைக் கண்டு மிகவும் அஞ்சுகின்றது என்பதைக் காட்டும் சான்றுகளும் குவிந்து வருகின்றன. அண்மைக்காலமாக டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க டொலரின் உலகளாவிய மேலாதிக்கத்தை பிரிக்ஸ் சவால் செய்யும் சாத்தியம் குறித்து பயந்து பிரிக்ஸை சாடி வருவது தெரிந்ததே.

‘பிரிக்ஸ் அமைப்பின் வேகமான வளர்ச்சி டொலரின் ஆதிக்கத்திற்கு சவால் விடுகின்றது. தனது உறுப்பு நாடுகளிடையே பரிவர்த்தனைகளுக்கான நாணயமாக டொலருக்கு மாற்றுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது. பிரிக்ஸ் சீராக வளர்ந்து வருகின்றது. பிரதான உலக நாணயமான டொலரின் ஆதிக்கம் மற்றும் டொலரை ஆயுதமயமாக்கும் அமெரிக்காவின் கொள்கை குறித்து பிரிக்ஸ் பிரத்தியேக கவலை கொண்டுள்ளது’ என்று பேராசிரியர் ஜெஃப்ரி சாக்ஸ் (Professor Jeffrey Sachs) கூறியிருக்கிறார்.

எதிர்காலத்தில் பிரிக்ஸ் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் குறித்து இலங்கை அரசுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. ரஷ்யாவில் நடைபெற்ற 16வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கான தனிப்பட்ட அழைப்பை ஆரம்பத்தில் ஜனாதிபதி அனுர குமரா திசநாயக்கா ஏற்றுக்கொண்டாலும், இறுதியில் அந்த நிகழ்வில் அவர் கலந்து கொள்ளவில்லை. இதனைத் தொடர்ந்து, இலங்கை பிரிக்ஸ் அமைப்பில் இணைந்து கொள்வதற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. ஆனால் பிரிக்ஸின் புதிய அபிவிருத்தி வங்கி (New Development Bank) இலங்கையை உறுப்பினராக ஏற்றுக் கொண்டுள்ளது.

தெற்குலக மக்களை அடிமைப்படுத்துவது மாத்திரமல்லாது, அவர்களை ஏழ்மையில் நிரந்தரமாக வைத்திருக்கும் டொலர் ஆதிக்கம் செலுத்தும் (IMF, World Bank) தற்போதைய உலகப் பொருளாதார முறைமையிலிருந்து, தன்னை விடுவித்துக் கொள்ள தெற்குலக நாடுகளிற்கு உதவ பிரிக்ஸ் அமைப்பு விரும்புகின்றது. எனவே இலங்கையின் தற்போதைய அரசாங்கம், உலகப் பொருளாதார அரங்கில் ஏற்பட்டு வரும் துரிதமான மாற்றங்கள், குறிப்பாக வளர்ந்து வரும் பிரிக்ஸ் அமைப்பின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு, இலங்கைக்கு உச்சபட்ச நன்மை கிடைக்க பிரிக்ஸ் அமைப்பில் இணைந்து கொள்வதற்கான முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டும்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

வானவில்

‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து ‘வானவில்’ இதழ்களையும் வாசிக்கலாம்.

# குருக்கள்மடம் புதைகுழிகள் அகழப்படுவது எப்போது?



“அநீதியைத் தடுக்க நாம் சக்தியற்றவர்களாக இருக்கலாம். ஆனால் நாம் எதிர்ப்புத் தெரிவிப்பதை ஒருபோதும் தவறவிடக்கூடாது” –ஹிட்லரின் வதை முகாமில் இருந்து உயிர் பிழைத்தவரும், நோபல் பரிசு பெற்றவருமான எலி வீசல்.

ஹஜ் யாத்திரை சென்றுவிட்டுத் திரும்பியபோது குருக்கள் மடத்தில் வைத்து கொல்லப்பட்டு, ஒரே குழியில் புதைக்கப்பட்ட 72 அப்பாவி முஸ்லீம் மக்களின் சம்பவம் நடந்து யூலை 12 ஆம் திகதியுடன் 35 வருடங்கள் ஆகின்றது.

வடக்கில் சில மனிதப் புதை குழிகள் தோண்டப்பட்டு மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டாலும், குருக்கள் மடத்தில் கொன்று புதைக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்னமும் நீதி மறுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்.

காத்தான்குடியில் பள்ளிவாசலில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த 103 முஸ்லீம் மக்கள் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர். ஏறாவூரிலும் அது போன்ற சம்பவங்கள் புலிகளினால் நடத்தப்பட்டன. அந்த வரிசையில் 1990இல் குருக்கள்மடத்தில் புலிகளால் நடத்தப்பட்ட படுகொலையும் ஒன்றாகும்.

அது மட்டுமின்றி, அந்த இருண்ட காலத்தில் முஸ்லீம் மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் புலிகளினால் பறிமுதல் செய்யப்பட்டன. திட்டமிட்ட முறையில் ஆள் கடத்தல்கள், கொலைகள், கொள்ளைகள் என்பன முஸ்லீம் மக்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்டன.

குருக்கள்மடத்தில் மொத்தமாக 167 முஸ்லீம் மக்களைப் புலிகள் கொலை செய்து புதைத்ததாகத் தெரிய வருகிறது. கொல்லப்பட்டவர்கள் முதலில் கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள் என்றும், பின்னர் அவர்களைப் புலிகள் கொலை செய்து கடற்கரையில் ஆழமற்ற குழிகளில் புதைத்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். அந்த இடத்தில் இப்பொழுது ஒரு இராணுவ முகாம் அமைந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து சில அரசுசாரா நிறுவனங்கள் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், இதுவரை முறையான விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை. குற்றமிழைத்தவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை இழப்பீடு எதுவும் வழங்கப்படவில்லை. அந்த மக்கள் தொடர்ந்தும் மௌனமாக துக்கித்த வண்ணம் உள்ளனர்.

அதே நேரத்தில், இதே காலகட்டத்தில் காத்தான்குடி பகுதியில் இருந்து 340 வரையிலான முஸ்லீம் மக்கள் காணாமல் போயுள்ளதாகவும் தெரிய வருகிறது.

“செம்மணி போன்ற இடங்களில் புதைகுழிகள் தோண்டப்படும் போது, குருக்கள்மட புதைகுழிகள் ஏன் இன்னமும் தோண்டப்படவில்லை? முஸ்லீம் மக்களின் உயிர்கள் மதிப்புக் குறைந்தவையா?” என, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஸிப்லி பாருக் ஒரு நியாயமான கேள்வியொன்றை தமிழ் ஊடகமொன்றில் எழுப்பியுள்ளார்.

செம்மணி 1998 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இவ்வருடம் யூன் மாதம்தான் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் புதைகுழிகளிலிருந்து குழந்தைகள் உட்பட பலரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த அகழ்வுப் பணிகள் சர்வதேச மேற்பார்வையின் கீழ் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கையும் மக்களால் எழுப்பப்பட்டுள்ளது.

ஆனால், குருக்கள்மட படுகொலைகள் சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டே காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

களுவாஞ்சிக்குடியில் உள்ள புதைகுழியை அகழ்வாய்வு செய்யும்படி 2014 இல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஆனால் அரசியல் தலையீட்டினாலும், நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டியும், அகழ்வாய்வு நிறுத்தப்பட்டதாக காத்தான்குடி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ரவூப் ஏ.மஜீத் கூறியுள்ளார். அங்கு நடைபெற்ற சம்பவத்தில் அவர் தனது இரண்டு மாமனார்களை இழந்தவராவார்.

“குருக்கள்மடம் சம்பவம் மறக்கப்பட்ட ஒன்று அல்ல. அது முஸ்லீம்களின் மனதில் சீழ் பிடித்த காயமாக உள்ளது. நாம் அமைதியாக இருக்கக்கூடாது. உறுதியுடன் நீதியைக் கோர வேண்டும்” என, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஃபிட்ஹவுஸ் நளீமி கூறியுள்ளார்.

நீதி என்பது வெறுமனே ஒரு தொகை மட்டும் கிடைக்கும் ஒரு விளையாட்டு அல்ல.

குருக்கள்மட சம்பவத்திற்கு நீதி கேட்பது, செம்மணியையோ, தமிழர் நலனையோ குறைமதிப்புக்கு உட்படுத்தாது. அநீதியால் பாதிக்கப்பட்ட அனைவரும் இனம், மதம், மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்டு நீதி கேட்பது நியாயமானது.

குருக்கள்மடம் படுகொலையை ஒரு போர்க் குற்றமாக இலங்கை அரசு அங்கீகரித்து, அதை உள்நாட்டு மற்றும் சர்வதேச உண்மை மற்றும் நல்லிணக்க முயற்சியின் ஒரு அங்கமாகச் சேர்க்க வேண்டும் என, இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும் வாழும் முஸ்லீம் மக்கள் கோர வேண்டும்.

இது மோதலுக்கான அழைப்போ அல்லது பிரிவினையைத் தூண்டுவதற்கான அழைப்போ அல்ல. இது உண்மைக்கான அழைப்பு. கொல்லப்பட்டவர்களை மதிக்கும், கண்ணியப்படுத்தும் அழைப்பு.

நீண்ட காலமாக முஸ்லீம் சமூகத்துக்கு நீதியைக் கோரும் சர்வதேசத் தளங்கள் எதுவும் இல்லை. அந்தக் காலம் முடிந்து விட்டது. இனி நாங்கள் குரல் எழுப்ப வேண்டும். நமது சமூகத்துக்காக மட்டுமின்றி, இலங்கையில் நடைபெற்ற மோதலில் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களுக்காகவும் நாம் குரல் எழுப்ப வேண்டும்.

வரலாற்றை நாம் தைரியமாகவும் தெளிவாகவும் உலகின் முன் சொல்ல வேண்டும். கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொண்டு, அரசியலில் தீவிரமாகப் பங்கேற்ற வேண்டியதின் அவசியத்தை எமது அடுத்த தலைமுறைக்கு கற்பிக்க வேண்டிய நேரம் இது.

குருக்கள்மடம் ஒரு அமைதியான கல்லறையாக இருக்கக்கூடாது. அது வலியின் அடையாளமாகவும், நீதியைத் தேடுவதற்கான எமது கூட்டுத் தீர்மானத்தின் அடையாளமாகவும் மாற வேண்டும்.

('கொழும்பு ரெலிகிராப்' இணையத்தளத்தில் வந்த கட்டுரையின் சாராம்சம்)

# நோபல் பரிசை நிராகரித்த ஒரே மனிதர்!

**நோ**பல் பரிசு என்பது மனிதர்கள் பெறும் உயர்ந்த கௌரவம் என அவர்கள் எமக்குச் சொல்ல விரும்புகிறார்கள்.

ட்ரோன்கள் மூலம் யுத்தங்களை நடத்தும் ஜனாதிபதிகளுக்கு அவர்கள் இதை வழங்குகிறார்கள். அவர்கள் இதை சுவர்களை எழுப்புபவர்களுக்கும், நிறப்பாகுபாட்டுக்கு நிதி வழங்குபவர்களுக்கும், தடைகளின் மூலம் குழந்தைகளைப் பட்டினி போடுபவர்களுக்கும் வழங்குகிறார்கள்.

ஆனால் வரலாற்றில் ஒரேயொரு மனிதர் அந்தக் குழுவின் கண்களைப் பார்த்துச் சொன்னார்: "வேண்டாம்"

அவர் சமாதானத்துக்கு பெறுமதியில்லாதவன் என்பதினால் அல்ல.

ஏனென்றால் அவர் இந்தப் பொய்யை நிராகரித்த காரணத்தால்.

அவரது பெயர் லே டக் தோ (Le Duc Tho)

ஒரு வியட்நாமிய புரட்சியாளர்.


ஒரு பேச்சுவார்த்தையாளர்.

தன் வாழ்நாள் முழுவதும் சக்கரவர்த்தியை (Empire) எதிர்த்தவர், வாக்கு வன்மையால் அல்ல, ஆனால் பெறுபேறுகளால்.

1973 இல் நோபல் குழு வியட்நாம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பாரிஸ் சமாதான உடன்படிக்கைப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதற்காக ஹென்றி கீஸிஞ்சருக்கும் (Henry Kissinger)லே டக் தோவுக்கும் சமாதானத்துக்கான பரிசை அறிவித்தது.

கீஸிஞ்சர் ஏற்றுக்கொண்டார்.

லே டக் தோ ஏற்கவில்லை.



காரணம், கீஸிஞ்சர் போலல்லாது சமாதானத்தின் உண்மையான அர்த்தத்தை அவர் புரிந்து கொண்டார்.

இது ஒரு சொற்பொழிவு அல்ல.

ஒரு கை குலுக்குவது அல்ல.

அமெரிக்க குண்டு வீச்சுகளுக்கு மத்தியில் ஒரு பத்திரத்தில் கையெழுத்துப் போடுவது போன்றதல்ல.

இது ஒரு நீதி.

சுயாதிபத்தியம்.

மேலும் மரணித்த உடல்கள் வேண்டாம், மேலும் பொய்கள் வேண்டாம், வானத்திலிருந்து மேலும் பி–52 (B-52) குண்டு வீச்சு விமானங்கள் மூலம் "சுதந்திரத்தை" போடுவது மேலும் வேண்டாம். நோபல் பரிசை நிராகரிக்கும் போது, "வியட்நாமில் சமாதானம்" இல்லை என லே டக் தோ கூறினார். ஏனெனில், இந்த கையெழுத்தின் மை காய்வதற்கு முன்னர் அமெரிக்காவின் குண்டு வீச்சுத் தொடரும்.

அதன் பொய்கள் தொடரும்.

எப்போதும் போல அது வழங்கிய உறுதி மொழிகள் தொடர்ந்து மீறப்படும்.

அவருக்கு உண்மை தெரியும்.

விருதுகள் இரத்தம் சிந்துவதை நிறுத்தப் போவதில்லை.

நேபாம் (Napalm) குண்டுகளை வீசும் கைகளால் சமாதானத்துக்கான பரிசு வழங்கப்படுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

எனவே, அவர் தனியாக நின்றார்.

அவர் கை தட்டலை விட்டு தூர விலகினார்.

மற்றைய பரிசு பெறுபவர்கள் போல முன்னரோ பின்னரோ அவர் எதையும் செய்யவில்லை.
அவர் நாணயத்தைப் பாதுகாத்தார்.

அவர்கள்
ஒஸ்லோவில் (Oslo)லே டக் தோவை பற்றிப் பேசவில்லை.

அவர்கள் அவரைப் பற்றி மேற்கத்தையப் பாடப் புத்தகங்களில் மேற்கோள் காட்டவில்லை.

அவர்கள் "மகத்தான சமாதான சாதனையாளர்கள்" என்ற தமது புத்தகங்களில் அவரது பெயரை உள்ளடக்கவில்லை.

ஏனெனில், அவர்களைப் பொறுத்தவரை அவர் செய்தது சரியானதல்ல.

இது ஏற்க முடியாதது.

அவர் கேலிக்கூத்தை அம்பலப்படுத்தினார்.

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**

# மார்க்சிய தத்துவத்தை செழுமைப்படுத்திய மகத்தான தலைவர் தோழர் ஸ்டாலின்

*தத்துவத்தையும் அதனை முன்னெடுக்கும் தலைவர்கள் குறித்தும் உரையாற்றிய தி.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா அவர்கள் மார்க்சியத் தத்துவத்தை நீர்த்து போகச் செய்தவர்களின் பட்டியலில் ஸ்டாலினையும் குறிப்பிட்டார்.*

மார்க்சியத் தத்துவத்தை செழுமைப்படுத்தி முன்னெடுத்த மகத்தான தலைவர்களில் ஒருவர் ஜோசப் ஸ்டாலின். பின்தங்கிய தேசத்தில் சோசலிச நிர்மாணம் / தேசிய இனப்பிரச்சனைகள் / பாசிச எதிர்ப்புக் கோட்பாடுகள் / மார்க்சியத் தத்துவத்துக்கு எளிமையான விளக்கங்கள் / கட்சி அமைப்பு கோட்பாடுகளில் புதிய அணுகுமுறைகள் என மார்க்சியத் தத்துவத்துக்கு ஸ்டாலினின் பங்கு குறிப்பிடத்தக்கது. அதனால்தான் கார்ல் மார்க்ஸ் / பிரடெரிக் ஏங்கெல்ஸ் / லெனின் ஆகிய ஆளுமைகளின் பட்டியலில் ஸ்டாலினையும் முன்வைக்கிறோம்.

**பின் தங்கிய தேசத்தில் சோசலிச நிர்மாணம்**

சோவியத் புரட்சிக்கு அடித்தளமிட்டவர் தோழர் லெனின் எனில், அந்த மகத்தான புரட்சியை பாதுகாத்து முன்னெடுத்துச் சென்ற பெருமை தோழர் ஸ்டாலின் அவர்களை சாரும். புரட்சி நடந்த ஏழே ஆண்டுகளில் லெனின் உயிர் நீத்தார். புரட்சிக்கு வெகு வலுவான அடித்தளத்தை லெனின் உருவாக்கியிருந்தார். எனினும் பிரச்சனைகள் ஏராளமாக இருந்தன. மிகமுக்கியமாக சித்தாந்த மோதல்கள் உருவாயின.

ரஷ்யா எனும் பின் தங்கிய தேசத்தில் புரட்சி வெல்வது சாத்தியமா? பல தேசங்களில் புரட்சி குறுகிய காலத்தில் உருவாகாமல் ரஷ்யா எனும் ஒரே தேசத்தில் மட்டும் புரட்சி நீடித்து நிற்குமா? இது சாத்தியமில்லை என ரொட்ஸ்கி போன்ற தலைவர்கள் முன்வைத்தனர். சோவியத் புரட்சிக்கு பின்னர் குறுகிய காலத்தில் சில வளர்ந்த தேசங்களில், குறிப்பாக ஜெர்மனியில் புரட்சி நடக்கும் எனவும், அது சோவியத் புரட்சிக்கு உதவும் எனவும் மதிப்பிடப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை.

ரொட்ஸ்கி போன்ற தலைவர்களின் மதிப்பீடுக்கு மாறாக ரஷ்யா எனும் தனி



தேசத்தில் புரட்சி சாத்தியம் என்பதை சித்தாந்த மட்டத்திலும் நடைமுறையிலும் நிரூபிக்க வேண்டிய கட்டாயம் லெனினுக்கு பின்னர் ஸ்டாலினுக்கு ஏற்பட்டது. ரஷ்ய மக்களின் உதவியுடனும் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் மிகப் பெரும்பான்மை ஆதரவுடனும் பொருளாதாரத்தில் ஒரு பின் தங்கிய தேசத்தில் புரட்சி சாத்தியமே என நடைமுறையிலும் சித்தாந்த அடிப்படையிலும் ஸ்டாலின் சாதித்துக் காட்டினார்.

***அ.அன்வர் உசேன்***

சித்தாந்தத்தின் வெற்றி என்பது நடைமுறையில் நிரூபிக்கப்படுவது தான் என்பதை ஸ்டாலின் உணர்ந்திருந்தார். எனவே சோசலிச சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் மக்கள் மற்றும் கட்சியின் முழு கவனத்தையும் செலுத்த ஸ்டாலின் உழைத்தார். உற்பத்தி சக்திகளை வளர்த்திட ஸ்டாலின் ஆற்றிய பணிகள் ஈடு இணையற்றவை. திட்டமிட்ட பொருளாதாரம் எனும் கோட்பாடை சோவியத் ரஷ்யா முதன்முதலில் உலகுக்கு அறிமுகப்படுத்தியது. ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டன. ஐந்தாண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் நான்கு ஆண்டுகளிலேயே நிறைவேற்றப்பட்டன. 1934 ஆம் ஆண்டு ரஷ்யாவின் கடைசி வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூடு விழாவிற்கு தலைமை தாங்கிய ஸ்டாலின் பேசினார்: “முதலாளித்துவ நாடுகளில் மக்கள் வேலைகளை தேடிக்கொண்டுள்ளனர். ஆனால் ரஷ்யாவில் வேலைகள் மக்களை தேடிக்கொண்டுள்ளன.”

திட்டமிட்ட பொருளாதாரமும், ஐந்தாண்டுத் திட்டம் எனும் பொருளாதாரக் கோட்பாடும் ஸ்டாலின் தலைமையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்த மிகப்பெரிய மார்க்சியப் பொருளாதார நடைமுறை ஆகும். முதலாளித்துவ உலகம் நெருக்கடியில் திணறிக்கொண்டிருந்த பொழுது சோவியத் யூனியன் சாதனைகளைப் படைத்துக் கொண்டிருந்தது. பொருளாதாரத்தில் ஒரு பின்தங்கிய தேசத்தில் புரட்சி சாத்தியமே என நடைமுறையிலும் சித்தாந்த அடிப்படையிலும் நிரூபித்த ஸ்டாலின், மார்க்சிய சித்தாந்தத்தில் புதிய அத்தியாயம் எழுதினாரெனில், அது மிகை அல்ல. ஸ்டாலின் மார்க்சியத்தை நீர்த்து போகச் செய்யவில்லை, மாறாக செழுமைப்படுத்தினார்.

**தேசிய இனப்பிரச்சனை**

மார்க்சிய சித்தாந்தத்துக்கு ஸ்டாலின் அவர்களின் மிகப்பெரிய பங்களிப்பு “தேசிய இனப்பிரச்சனை” குறித்த கோட்பாடுகள் ஆகும். நவீன வரலாற்றில் தேசம் / தேசியம் / தேசிய இனப்பிரச்சனை ஆகியவை குறித்து ஸ்டாலின் அவர்களின் கோட்பாடு கலங்கரை ஒளி போல அமைந்தது. ஒரு மக்கள் குழு எப்பொழுது தேசமாக அல்லது தேசிய இனமாக அறியப்படுகிறது? இந்த கேள்வியை எழுப்பி அதற்கு ஸ்டாலின் பதில் தருகிறார்:
‘ஒரு தேசிய இனத்துக்கு பொதுவான மொழி அவசியம். அதே சமயத்தில் ஆங்கிலம் எனும் ஒரே மொழியை பேசும் அமெரிக்காவும் பிரிட்டனும் ஏன் ஒரே தேசமாக இல்லை? ஒரே தேசம் எனில் அது ஒரே பூகோளப் பகுதியாக இருக்க வேண்டும். ஆனால் அது மட்டும் போதாது. ஒரே மாதிரியான பொருளாதார வாழ்வியல் முறை இருக்க வேண்டும் இதுவும் கூட போதாது. பண்பாடு அடிப்படையிலான ஒரே மாதிரியான உளவியல் சிந்தனை இருக்க வேண்டும்.’

எனவே ஒரு தேசம் அல்லது தேசியம் எனில் பொதுவான மொழி / பூகோளப் பகுதி / பொருளாதார வாழ்வியல் முறை / பொதுவான பண்பாடு அடிப்படையில் உருவான பொதுவான உளவியல் ஆகியவற்றின் அடிப்படையில் வரலாற்று ரீதியாக அமைந்த மக்களின் குழுதான் தேசமாக இருக்க இயலும் என்பதை ஸ்டாலின்

விளக்குகிறார். எனினும் தேசிய சிந்தனையும் கோட்பாடுகளும் உழைக்கும் வர்க்கங்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். அது முதலாளித்துவத்துக்கு மட்டுமே பயன்படும் எனில், அத்தகைய தேசியத்தால் எந்த பலனும் இல்லை என்பதையும் குறிப்பிடுகிறார். மேலும் தேசிய இனக் கோட்பாடு மாறாமல் அப்படியே இருப்பது இல்லை எனவும் காலம் மற்றும் சூழலுக்கு ஏற்ப மாற்றங்கள் அடையும் எனவும் குறிப்பிடுகிறார்.

**தேசிய இனங்களின் சமத்துவம்**

சோவியத் ஒன்றியம் வெவ்வேறான மொழியும் பண்பாடும் கொண்ட 15 குடியரசுகளை உள்ளடக்கியதாக இருந்தது. பெரியதும் சிறியதுமாக 60 தேசிய இனங்களும் குழுக்களும் அங்கு இருந்தன. அத்தகைய ஒன்றியம் உருவானதிலும் அதனை கட்டிக்காத்ததிலும் ஸ்டாலின் மார்க்சிய அடிப்படையிலான தேசிய கோட்பாடுகளை பரிசோதித்தார். வெற்றிகரமாகச் சாதித்தார்.

1936 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சோவியத் அரசியல் சட்டம் 6 மாதங்கள் பொது விவாதத்துக்கு உள்ளாக்கப்பட்டது. 5.5 கோடி பேர் விவாதங்களில் பங்கேற்றனர். 43,000 திருத்தங்கள் உழைக்கும் மக்களால் முன்வைக்கப்பட்டன. அரசியல் சட்டம் குறித்த மக்களின் திருத்தங்கள் சிலவற்றை ஏன் நிராகரிக்கப்பட வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என ஸ்டாலின் விவரிக்கிறார்.

புரட்சி முடிந்து 19 ஆண்டுகள் ஆகிவிட்டதால் ''பிரிந்து போகும் சுயநிர்ணய உரிமை'' அகற்றப்பட வேண்டும் என பல திருத்தங்கள் முன்வந்தன. அவை நிராகரிக்கப்பட வேண்டும் என ஸ்டாலின் கூறினார். சோவியத் ஒன்றியம் என்பது சுய விருப்பத்தின் மூலம் அமைந்த தேசம். எனவே பிரிந்து போகும் உரிமையும் இருக்க வேண்டும் என விளக்கினார்.

இன்னொரு திருத்தம் சோவியத் நாடாளுமன்றத்துக்கு ஒட்டு மொத்த அவை ஒன்றும், தேசிய இனங்களுக்கான இன்னொரு அவையும் என இரு அவைகள் தேவை இல்லை என முன்வைக்கப்பட்டது. இதனையும் ஸ்டாலின் நிராகரித்தார். சோவியத் ஒன்றியம் என்பது ஒருமுக தேசம் இல்லை. பன்முகத்தன்மை கொண்டது. அந்த பன்முகத் தன்மைக்கு அடித்தளம் பல தேசிய இனங்கள். ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தனிப்பட்ட குணங்களும் பண்பாடுகளும் உண்டு. அவை உறுதியாக பிரதிபலிக்க வேண்டும் எனில் தேசிய இனங்களுக்கான தனி அவை நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும் என வாதிட்டார்.

சோவியத் நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் சம எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருக்க வேண்டும் எனும் திருத்தத்தை நியாயமானது என ஸ்டாலின் ஏற்றுக்கொண்டார். ஒவ்வொரு குடியரசுக்கும் அதாவது ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் ஒரு துணை ஜனாதிபதி இருக்க வேண்டும் எனும் தீர்மானத்தையும் வரவேற்று ஏற்றுக் கொள்ள முன்மொழிந்தார். ஸ்டாலின் அவர்களின் தேசிய இனக்கோட்பாடுகளும் நடைமுறையும் மார்க்சியத்தை மேலும் செழுமைப்படுத்தியது.

திரு. ராசா கூறியது போல ஸ்டாலின் மார்க்சியத்தை நீர்த்துப் போகச்செய்யவில்லை.

**பாசிசத்துக்கு எதிரான போர்**

இன்றைய இந்தியாவில் நாம் சந்திக்கும் மிகப்பெரிய ஆபத்து பாசிசம் ஆகும். பாசிசம் என்றால் என்ன? இந்த கேள்விக்கு பதில் தேடும் பொழுது எவர் ஒருவரும் அடையும் இடம் இத்தாலி / ஜெர்மானிய பாசிசம்தான். பாசிசத்தை எப்படி வரையறுப்பது? அதற்கு எதிராக எப்படிச் செயல்படுவது? ஆகிய சித்தாந்த மற்றும் நடைமுறைக் கோட்பாடுகளை உருவாக்கியதில் ஸ்டாலின் அவர்களுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு.

பாசிசம் முதலாளித்துவத்தின் மிகக்கொடூர சீரழிந்த வடிவம் என்பதை சுட்டிக்காட்டிய ஸ்டாலின், அது ஜனநாயக எண்ணம் கொண்ட முதலாளித்துவப் பிரிவையும் அழிக்க முனைவதால் அந்தப் பிரிவின் ஒத்துழைப்பையும் பெற வேண்டும் என்றார். தொழிலாளி வர்க்கத்தின் சுயேச்சை இயக்கங்கள் ஒருபுறமும், பாசிசத்துக்கு எதிராகச் செயலாற்ற முன்வரும் முதலாளித்துவப் பிரிவுகளுடன் ஒற்றுமை இன்னொரு புறமும் என, இரு அணுகுமுறைகளை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்தினார். அதே சமயம் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையும் போராட்டங்களும்தான் பாசிசத்தை நிரந்தரமாக வீழ்த்த முடியும் என்பதை விளக்கினார்.

ஸ்டாலினின் ஒற்றுமைக்கான வேண்டுகோளை முதலாளித்துவ நாடுகள் அங்கீகரிக்க மறுத்ததால் சோவியத் யூனியன் தன்னந்தனியாகவே ஹிட்லருக்கு எதிராகப் போராடியது. பின்னர் வேறு வழியின்றி சோவியத்யூனியனுடன் முதலாளித்துவ தேசங்கள் கை கோர்த்தன. பின்னர் பாசிசம் வீழ்ந்ததும் மனிதகுலம் காப்பாற்றப்பட்டதும் வரலாறு. பாசிச காலத்தில் மார்க்சியக் கோட்பாடுகளை உருவாக்கியதும் அவற்றை அமுலாக்கியதிலும் வென்ற ஸ்டாலின் அவர்கள் அதனை நீர்த்து போகச் செய்தார் என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?


**ஃபீனிக்ஸ் பறவை போல மீண்டெழுந்த சோவியத் யூனியன்!**

பாசிசத்துக்கு எதிரான இரண்டாம் உலகப்போரில் சோவியத் யூனியனுக்கு சுமார் 2.80 கோடி மனித இழப்புகள் மட்டுமல்ல, ஆலைகள், அணைகள், கிராமங்கள், சுரங்கங்கள், கால்நடைகள் என பல அழிந்தன. இந்த இழப்புகள் குறித்து பின்னாளில் அமெரிக்க ஜனாதிபதியாக பணியாற்றியவரும் போர்க் காலத்தில் அமெரிக்க படை தளபதியாக இருந்தவருமான ஐசன்ஹோவர் தனது நினைவுக் குறிப்புகளில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:
“1945 இல் நான் விமானத்தில் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது நான் கண்ட காட்சிகள் சொல்ல முடியாத மனவேதனையை அளித்தன. சோவியத் யூனியனின் மேற்கு எல்லையிலிருந்து மொஸ்கோ நகரம் வரை ஒரு வீடு கூட முழுமையாக இல்லை. அனைத்து வீடுகளும் அழிக்கப்பட்டிருந்தன. இந்த நிலப்பரப்பில் இலட்சக்கணக்கான பெண்களும் குழந்தைகளும் முதியவர்களும் (ஹிட்லர் படைகளால்) கொல்லப்பட்டனர். இந்த எண்ணிக்கையை சோவியத் அரசாங்கத்தால் கணக்கீடு செய்ய முடியவில்லை என மார்ஷல் சுகோவ் என்னிடம் கூறினார்'' (Crusade in Europe/by Dwight D.Eisenhower).

எனினும் ஸ்டாலின் கலங்கவில்லை. சோவியத் மக்களை தட்டி எழுப்பினார். சோவியத் யூனியன் மறுகட்டமைப்புக்கு ஊக்கப்படுத்தினார். மிக குறுகிய காலத்தில் ஃபீனிக்ஸ் பறவை போல

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# இராணுவத்தைக் காட்டிக்கொடுத்தல்



இலங்கையின் ஆளும் கட்சி அரசியல்வாதிகளும் அவர்களின் எதிரிகளும் இராணுவத்தை தேசத்தின் மீட்பர் என்று புகழ்ந்து, அரசியல் ஆதாயம் பெறும் மாதம் மே மாதமாகும். தங்களுக்குத் தாங்களே தேசியக் கொடியைப் போர்த்திக் கொண்டு, இராணுவத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டதாக ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டும் அரசாங்கத் தலைவர்களும் அவர்களது அரசியல் எதிரிகளும் எம்மிடயே உள்ளார்கள்.

எதிர்க்கட்சிகளின் அழுத்தத்திற்கு அடிபணிந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மற்றொரு திருப்பத்தை ஏற்படுத்தியது. முன்னாள் இராணுவ அதிகாரியாக இருந்து பிரதி அமைச்சராக மாறிய ஒருவர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு, தேசிய போர் வீரர்கள் தின நினைவுகூரல் மே 19 அன்று நடாத்தப்படுமென அரசாங்கம் அறிவித்தது. ஆனால் இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை சிறுமைப்படுத்துவதாக அரசாங்கத்தின் மீதான பிரச்சாரத் தாக்குதலை எதிர்க் கட்சிகள் உக்கிரமாக்கிய நிலையில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அதில் பங்குபற்றினார்.

16 ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் போர் வீரர்களை கௌரவிக்கும் தனியான நினைவு நிகழ்வு 20.05.2025 அன்று நடைபெற்றது.

இந்தத் தலைவர்கள் ஏன் தமது அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு உயிரிழந்த மாவீரர்களை கௌரவிக்க முடியாது?

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதில் இராணுவம் செய்த தியாகங்களை ராஜபக்சக்கள் அரசியலாக்கி 2010 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றார்கள். ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி உட்பட அப்போதைய எதிர்க்கட்சிகளும் அவ்வாறே செய்தன. அவர்கள் 2010 இல் எதிர்க்கட்சியின் பொது ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் போரை வென்ற இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை நிறுத்தினார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், ஜெனரல் பொன்சேகா தலைமை தாங்கிய இராணுவத்தின் மீது போர்க்குற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவரை முழுமையாக ஆதரித்தது என்பதே!

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னின்று நடத்திய புகழ்பெற்ற போர் அதிகாரிகளில் ஒருவரான ஜெனரல் சவேந்திர சில்வா, ‘தேசப்பற்றுள்ள அரசியல்வாதிகளுக்கு’ சில உள்வீட்டு உண்மைகளைக் கூறியுள்ளார். ‘தெரண’ 24/7 பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில், ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் இலங்கை இராணுவத்தை கைவிட்டுவிட்டன என்று அவர் வருத்தம் தெரிவித்தார். இலங்கை இராணுவத்திற்கு எதிரான பாதகமான சர்வதேச பிரச்சாரம் மற்றும் விரோத நடவடிக்கைகளை எதிர்கொள்ள அவர்கள் விலைமதிப்பற்ற எதையும் செய்யவில்லை.

சில மேற்கத்திய நாடுகளால் விதிக்கப்பட்ட பயணத் தடைகளை பல முன்னாள் இராணுவ அதிகாரிகள் எதிர்கொள்கின்றனர். துரதிர்ஷ்டவசமாக, இந்த நாடுகளும் அவற்றின் தலைவர்களும் பயங்கரவாத ஆதரவாளர்களை ஆதரிப்பதோடு, பயங்கரவாதத்திற்கு நிதி திரட்டுவதற்கும் பயங்கரவாத நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதற்கும் தங்கள் பிரதேசங்களை துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கிறார்கள் என்பது கவலைக்குரியது. புலி மீது ஏறி சவாரி செய்ததாக புன்னகைத்து, அந்த விலங்குக்கே இரையாகிய நைஜர் நாட்டு இளம்பெண் செய்த அதே தவறை தாங்களும் செய்கிறோம் என்பதை அவர்கள் உணரத் தவறிவிட்டனர். பயங்கரவாத குழுக்களை உருவாக்கிய மற்றும்/அல்லது ஆதரித்த அனைத்து நாடுகளும் தமது புவிசார் மூலோபாய நலன்களை முன்னெடுக்க முடியாமல் தன் வினை தன்னைச் சுடுகின்றது. இதற்கு அமெரிக்கா ஓர் உதாரணமாகும்.

பயங்கரவாதம் ஒரு முடிவுக்கு ஒரு வழி அல்ல. அதுவே முடிவும் வழிமுறையும் ஆகும். எனவே, ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால், கொள்ளை நோயை அதன் அனைத்து வடிவங்களிலும், வெளிப்பாடுகளிலும் துடைத்தெறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இலங்கை இராணுவம் அதைத்தான் செய்துள்ளது. இந்த நாட்டில் வடக்கு மற்றும் தெற்கு பயங்கரவாதம் தோற்கடிக்கப்படாமல் இருந்திருந்தால், அந்த மக்களின் குரல் கேட்கப்பட்டிருக்காது. மேலும் அந்த மக்கள் இன்னமும் தோட்டாக்கள் மற்றும் குண்டுகளுக்கு பயந்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

புலிகளும் ஜே.வி.பி.யும் தேர்தலைப் பகிஷ்கரிக்க உத்தரவிட்டனர். தமது சட்டவிரோத உத்தரவுகளை மீறியதற்காக பொதுமக்களையும் அரசியல் தலைவர்களையும் படுகொலை செய்தனர், கொள்ளைகளில் ஈடுபட்டனர். மேலும் ஜனநாயக மாற்றுக்கருத்துக்களை மிகவும் கொடூரமான முறையில் நசுக்கிய

அதேவேளை, பில்லியன் டொலர் பெறுமதியான பொதுச் சொத்துக்களை அழித்தனர். ஜே.வி.பியின் பயங்கரவாதம் ஒழிக்கப்படாமல் இருந்திருந்தால் அது மீண்டும் ஜனநாயக அரசியலுக்குள் நுழைந்திருக்காது. விடுதலைப் புலிகளின் தோல்வியானது, வடக்குக் கிழக்கில் ஜனநாயகம் புத்துயிர் பெறுவதற்கு வழிவகுத்தது.

2022 ஆம் ஆண்டு 'அரகலய' (போராட்டம்) உச்சத்தில் இருந்தபோது வன்முறைக் கும்பலுக்கு எதிராக பாராளுமன்றத்தைப் பாதுகாத்து இலங்கையின் ஜனநாயகத்தைக் காப்பாற்றியது இராணுவம்தான். அதாவது, இராணுவத்தின் தீர்க்கமான நடவடிக்கை மட்டும் இல்லையென்றால், அராஜக சக்திகள் பாராளுமன்றத்தை நோக்கி அணிவகுத்துச் சென்று, அதற்கும் தீ வைத்திருப்பார்கள். இலங்கையின் ஜனநாயகத்திற்கு தொடுவானமாக இருந்திருக்கக்கூடிய நிகழ்வொன்றினைத் தூண்டிவிடுவதில் ஜே.வி.பி கருவியாக இருந்தது என்பதை ஜே.வி.பி ஏற்றுக்கொண்டுள்ளது.

தேசப்பற்றை சட்டைக்கையில் அணிந்திருக்கும் அரசியல்வாதிகள் இராணுவத்திற்கு செய்த மிகப்பெரிய அநீதி என்னவென்றால், அவர்கள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு ஆயுதப்படைகளின் தியாகங்களையும் சாதனைகளையும் பயன்படுத்தவில்லை. 2009 இல் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் ராஜபக்சாக்கள் தங்களை வளப்படுத்திக் கொள்வதிலும் தங்கள் வம்சத்தைக் கட்டியெழுப்புவதிலும் மும்முரமாக இருந்தனர். சிறிசேனாக்களும் அவ்வாறே செய்ததால், நெல் விவசாயிகளும் அரிசி நுகர்வோரும் அவர்கள் தலைமையிலான ஆலை உரிமையாளர்களின் கும்பலின் தயவில் தங்கியுள்ளனர். ஐ.தே.க. தலைவர்கள் நண்பர்களுக்கு பதவிகளை வழங்கி ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஜே.வி.பி., பல்கலைக்கழகங்கள் மற்றும் வேலைத் தளங்களில் சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டும், அதன் போர் சிந்தனைக்கு முட்டுக்கொடுத்தும், எல்லாவற்றுக்கும் மேலாக, அதிகாரத்திற்கான குறுக்குவழிகளையும் தேடியது.

சகலவித அரசியல் வர்ணங்களையும் தரித்து பெருங்கூச்சலிடும் 'தேசபக்தர்கள்' இராணுவத்தை கௌரவிப்பதற்கான சிறந்த வழி, அவர்களிடையேயான வேறுபாடுகளை களைந்து, தேசிய முன்னேற்றத்தை அடையவும் அனைத்து இலங்கையர்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்பவும் ஒன்றிணைந்து செயல்படுவதாகும்.

**நன்றி: 'த ஐலண்ட்', மே 20**

# இஸ்ரேலுடனான பொருளாதார உறவுகளை நிறுத்த வேண்டும்!

**இ**ஸ்ரேல் உடனான உறவுகளை ஒவ்வொரு நாடும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் பொருளாதார உறவுகளை நிறுத்தி வைக்க வேண்டும் என 30 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்ற மாநாட்டில் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் ஃபிரான்செஸ்கா அல்பனீஸ் (Francesca Albanese) மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார். இஸ்ரேலின் இனப்படுகொலைக்குத் துணை போகும் பன்னாட்டு நிறுவனங்களின் பட்டியலை வெளியிட்டு இஸ்ரேலை பொருளாதார ரீதியாக புறக்கணிக்க வேண்டும் என அவர் ஏற்கெனவே அழைப்பு விடுத்திருந்தார். இதனால் அவர் மீது அமெரிக்கா தடை விதித்தது.

**இஸ்ரேலின் படுகொலைக்கு எதிராக திட்டவட்டமான நடவடிக்கை**

இந்நிலையில், இனப்படுகொலைகளை நிறுத்துவதற்காக 30 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் பங்கேற்ற இரண்டு நாள் உச்சி மாநாடு கொலம்பியா தலைநகரான பொகோட்டாவில் (Bogota) ஜூலை 16ந் திகதி ஆரம்பமாகியது. அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேலானது, காஸாவிலும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளிலும் நடத்தும் இனப்படுகொலை மற்றும் பிற குற்றங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான 'திட்டவட்டமான நடவடிக்கைகளில்' கவனம் செலுத்துவது தொடர்பாக இந்த மாநாடு கூட்டப்பட்டிருந்தது.

ஹேக் (Hague) கூட்டமைப்பின் உறுப்பினர்களான பொலிவியா, கியூபா, ஹொண்டுரஸ், மலேசியா, நமீபியா, செனகல், அல்ஜீரியா, வங்கதேசம், பொட்ஸ்வானா, பிரேசில், சிலி, சீனா, ஜிபூட்டி, இந்தோனேசியா, ஈராக், அயர்லாந்து, லெபனான், லிபியா, மெக்ஸிகோ, நிக்கரகுவா, ஓமான், பாகிஸ்தான், பலஸ்தீனம், கத்தார், செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரெனடைன்ஸ், உருகுவே, வெனிசுவேலா ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

**அமெரிக்க நட்பு நாடுகளும் உச்சி மாநாட்டில் பங்கேற்பு**

குறிப்பிடத்தக்க வகையில், நேட்டோ உறுப்பு நாடுகளும் அமெரிக்காவின் நட்பு நாடுகளுமான நோர்வே, போத்துக்கல், ஸ்லோவேனியா, ஸ்பெயின் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளும் இதில் கலந்து கொண்டன. இம்மாநாட்டில் உரையாற்றிய போதே, "இஸ்ரேல் உடனான உறவு களை ஒவ்வொரு நாடும் மறு பரிசீலனை செய்து பொருளாதார உறவுகளை நிறுத்த வேண்டும்" என அல்பனீஸ் அழைப்பு விடுத்தார். அவர் மீது, அமெரிக்கா தடை விதித்தபோதும், இரண்டு வார இடைவெளியில் மீண்டும் இந்த அழைப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

இஸ்ரேலின் மின் உற்பத்திக்கு தேவையான நிலக்கரிகளை ஏற்றுமதி செய்யும் முதன்மை நாடு கொலம்பியாவாகும். ஆனால் கடந்த ஆண்டு அந்த ஏற்றுமதியை துண்டித்ததுடன் இஸ்ரேலுடனான உறவுகளையும் துண்டித்தது. மேலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இஸ்ரேலின் மீது இனப்படுகொலை வழக்கு தொடர்ந்த தென் ஆபிரிக்காவுடன் தானும் அந்த வழக்கில் இணைந்து கொண்டது. இந்த இரு நாடுகளும் தான் இரண்டு நாள் உச்சி மாநாட்டிற்குத் தலைமை தாங்கின.

கொலம்பியாவின் துணை வெளியுறவுத்துறை அமைச்சர் மௌரிசியோ ஜரமில்லோ ஜாசிர் (Mauricio Jaramillo Jassir) மாநாட்டிற்கு முன்பாக பேசிய போது, "பலஸ்தீனத்தில் நடைபெறும் இனப்படுகொலை ஒட்டுமொத்த சர்வதேச அமைப்பிற்கும் அச்சுறுத்தலாக உள்ளது. இனவெறி மற்றும் இனப் படுகொலைகளை கண்டு கொலம்பியாவால் அலட்சியமாக இருக்க முடியாது. இந்த மாநாட்டில் பங்கேற்கும் நாடுகள் இனப்படுகொலையை

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# ஆபிரிக்க இலக்கிய உலகின் சிங்கம்: கென்ய எழுத்தாளர் கூகி வா தியாங்கோ

*(ஜனவரி 1938 – மே 28, 2025)*



கூகி வா தியாங்கோ (Ngũgĩ wa Thiong'o) ஆபிரிக்காவின் மிகச் சிறந்த இலக்கிய ஆளுமைகளில் ஒருவர். அவர் வெறும் புத்தகங்களை எழுதியவர் அல்ல. அவர் ஒவ்வொரு படைப்பிலும் காலனியாதிக்கம், நவகாலனியாதிக்கம், மற்றும் சுதந்திரத்திற்குப் பிந்தைய துரோகத்தனமான அதிகாரிகளை எதிர்த்துப் போராட்டங்களை நடத்தினார். ஒவ்வொரு புத்தகமும் காலனிய பீரங்கிகள், நவகாலனிய அதிகாரிகள், மற்றும் சுதந்திரத்திற்குப் பிந்தைய துரோகத்தனமான அரசியல்வாதிகள் மீது வீசப்பட்ட ஒரு துல்லியமான வெடிகுண்டாகவே இருந்தது.

கூகியின் புத்தகங்கள் பெரும்பாலும் காலனியாதிக்கம், சுதந்திரத்திற்குப் பிந்தைய போராட்டங்கள், மற்றும் ஆப்பிரிக்க மொழிகளின் முக்கியத்துவம் ஆகிய கருப்பொருள்களை ஆராய்கின்றன. அறுபது ஆண்டுகளுக்கும் மேலான அவரது இலக்கியப் பயணத்தில், 1960களில் ஆங்கிலம் பேசும் இலக்கியக் கூடங்களில் இருந்து, ஆப்பிரிக்க மொழிகளில் கிக்குயு (Gikuyu) மொழியின் எதிர்ப்பு குரலாக எழுந்து, ஆபிரிக்க இலக்கியத்தையும் பின் காலனிய சிந்தனையையும் உலகளவில் வடிவமைத்தார்.

அவர் நாவல்கள், நாடகங்கள், நினைவுக் குறிப்புகள், மற்றும் கட்டுரைகள் என 30 இற்கும் மேற்பட்ட படைப்புகளை எழுதியுள்ளார். கூகியின் முக்கிய படைப்புகளில் சில, ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை அல்லது அவராலேயே மொழிபெயர்க்கப்பட்டவை:

Weep Not, Child (1964)
கிழக்கு ஆபிரிக்க எழுத்தாளர் ஒருவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அவரது முதல் நாவல். எழுச்சியின் தீப்பிழம்புகளுக்கு மத்தியில் இளம் பிள்ளையின் கனவுகள் சிதைந்துபோவதைச் சொல்லும் நெஞ்சை உருக வைக்கும் கதை.

The River Between (1965)
கலாச்சாரப் பிளவுகளைப் பற்றிய ஒரு கவித்துவ ஆய்வு. மிஷனரி கிறிஸ்தவமும் பாரம்பரிய கிக்குயு நம்பிக்கைகளும் மோத, இரண்டு கிராமங்கள் ஒரு உண்மையான மற்றும் உருவகமான பள்ளத்தாக்கால் பிளவுபடுகின்றன.

A Grain of Wheat (1967)
கூகியின் முதல் தலைசிறந்த படைப்பு. கென்ய சுதந்திரத்தின் முதல் நாள் அன்று துரோகம் மற்றும் தியாகத்தைப் பற்றிய ஒரு சிக்கலான கதை, பல குரல்கள் மூலம் சொல்லப்படுகிறது.

This Time Tomorrow (1970)
இங்கியூகி மேகரெரேயில் இருந்தபோது எழுதப்பட்ட ஒரு நாடகம். இது தலைமுறை மோதல்கள் மற்றும் சுதந்திரத்திற்குப் பிந்தைய இளைஞர்களின் முரண்பட்ட அபிலாஷைகளை ஆராய்கிறது.

The Black Hermit (1963)
கூகியின் முதல் நாடகம், 1962 இல் கென்யாவின் சுதந்திரக் கொண்டாட்டங்களின் போது நிகழ்த்தப்பட்டது. ஒரு இளைஞன் வீட்டிற்குத் திரும்பி வந்து பாரம்பரியமும் நவீனத்துவமும் வெளிப்படையான போரில் இருப்பதைக் காண்கிறான்.

Petals of Blood (1977)
சுதந்திரத்திற்குப் பிந்தைய உயரடுக்கு செய்த துரோகத்தைப் பற்றிய ஒரு கடுமையான குற்றச்சாட்டு. நான்கு கிராமவாசிகள் ஒரு கொலை மர்மத்தில் சிக்கி, முதலாளித்துவ பேராசை மற்றும் முறிந்த வாக்குறுதிகளை வெளிப்படுத்துகிறார்கள்.

Devil on the Cross (1980)
கமிடி அதிபாதுகாப்புச் சிறையில் சிறைச்சாலை கழிப்பறைத் தாளில் எழுதப்பட்டது. ஒரு பெண்ணின் மாயாஜால பயணத்தின் மூலம் நவகாலனிய சுரண்டலைச் சித்தரிக்கும் ஒரு பகிடி.

Detained: A Writer's Prison Diary (1981)
1977 இல் விசாரணையின்றி சிறைவைக்கப்பட்ட அவரது திகிலூட்டும் நினைவுக் குறிப்புகள். ஓர் ஆட்சி முறையின் பயத்தையும், அரசியல் ஆவணத்தையும் விவரிக்கும் தனிப்பட்ட அனுபவம்.

Barrel of a Pen (1983)
இலக்கியத்தின் புரட்சிகர ஆற்றல் பற்றிய அவரது நம்பிக்கையையும், மொழித் தேர்வு ஏன் ஒரு அரசியல் செயல் என்பதையும் விளக்கும் கட்டுரைகளின் தொகுப்பு.

I Will Marry When I Want (1982, கூகி வா மிரியுடன் இணைந்து)
கென்ய அரசால் தடைசெய்யப்பட்ட ஒரு கிக்குயு நாடகம். இதன் மேடையேற்றம் கூகி கைதுக்கு நேரடியாக வழிவகுத்தது. நில அபகரிப்பு, முதலாளித்துவம், மற்றும் போலித்தனமான மத பக்தி பற்றிய ஒரு கடுமையான விமர்சனம்.

Matigari (1986)
ஒரு கிக்குயு நாடகம் அரசியல் திகில் கனவாக மாறியது. ஒரு சுதந்திரப் போராளி ஊழல் நிறைந்த, முதலாளித்துவ கென்யாவுக்குத் திரும்பி வந்து, போராட்டம் உடை மட்டுமே மாறியுள்ளது என்பதைக் காண்கிறான்.

Decolonising the Mind (1986)
அவரது மிகவும் செல்வாக்கு மிக்க புனைகதையல்லாத படைப்பு. ஆபிரிக்க மொழிகளுக்கு அவர் மாறியதற்கான காரணங்களையும், எழுத்தாளர்கள் ஏன்

மொழியியல் இறையாண்மையைத் திரும்பப் பெற வேண்டும் என்பதையும் விளக்கும் கட்டுரைகளின் தொடர்.

Moving the Centre (1993)
புவியியல், கலாச்சார ரீதியாக, மற்றும் மொழியியல் ரீதியாக விளிம்பு நிலையில் உள்ள குரல்களுக்கான இடங்களை விரிவுபடுத்துவதை ஆதரிக்கும் கட்டுரைகள்.

Penpoints, Gunpoints and Dreams (1998)
ஆபிரிக்க சமூகங்களில் கலாச்சாரம், அரசியல், மற்றும் எதிர்ப்பு ஆகியவற்றின் சந்திப்பை பகுப்பாய்வு செய்யும் விரிவுரைகளின் தொகுப்பு.

Ngũgĩ wa Thiong'o Speaks (2006)
அவரது அறிவுசார் பரிணாம வளர்ச்சி மற்றும் சமூகத்தில் எழுத்தாளரின் செயல்பாடு பற்றிய அவரது பிரதிபலிப்புகளைக் காட்டும் நேர்காணல்கள்.

Wizard of the Crow (2006)
கிக்குயு மொழியில் எழுதப்பட்டு ஆசிரியரால் மொழிபெயர்க்கப்பட்ட 768 பக்க காவியம். சர்வாதிகாரம், பேராசை, மற்றும் உலகளாவிய உதவிகளின் அசிங்கங்களை கேலி செய்யும் ஒரு மந்திர யதார்த்தவாதம்.

Something Torn and New: An African Renaissance (2009)
உலகமயமாக்கப்பட்ட, பெரும்பாலும் சிந்தனையற்ற உலகில் ஆபிரிக்க கலாச்சாரத்தின் எதிர்காலத்தை ஆராயும் புனைகதையல்லாத கட்டுரைகள்.

Dreams in a Time of War (2010)
காலனிய ஆட்சியின் கீழ் அவரது குழந்தைப் பருவத்தின் நினைவுக் குறிப்புகள் – உயிர் பிழைத்தல், நம்பிக்கை, மற்றும் அவரது கருத்தியல் விழிப்புணர்வின் வேர்களைப் பற்றிய கதை.

In the House of the Interpreter (2012)
அலையன்ஸ் உயர்நிலைப் பள்ளியில் அவரது காலம், அங்கு காலனிய முரண்பாடுகள் கூர்மையாகி, அவரது அரசியல் உணர்வு ஆழமானது என்பதைக் காட்டுகிறது.

Birth of a Dream Weaver (2016)
மேகரெரேயில் அவரது பல்கலைக்கழக ஆண்டுகளை விவரிக்கிறது, அங்கு அவர் மாணவரில் இருந்து எழுத்தாளராக உருமாறினார் – மற்றும் அவரது கண்டத்தின் காயப்பட்ட ஆன்மாவைக் கண்டுபிடித்தார்.

Wrestling with the Devil (2018)
அவரது சிறை அனுபவம், கதை சொல்லும் சக்தி, மற்றும் சுதந்திர ஆபிரிக்காவில் எழும் சர்வாதிகார ஆட்சி ஆகியவற்றை விவரிக்கும் ஒரு கலப்பின நினைவுக் குறிப்பு.

The Perfect Nine (2020)
ஒரு கிக்குயு படைப்புத் தொன்மத்தை பெண்ணியப் பின்னணியுடன் மீண்டும் சொல்லும் வசன நாவல். வாய்மொழி கதை சொல்லல், கவிதை, மற்றும் ஆபிரிக்கத் தொன்மத்தின் ஒரு அரிய கலவை.

Minutes of Glory and Other Stories (2019)
ஐந்து தசாப்தங்களாக எழுதப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பு. அன்றாட வாழ்வும் அசாதாரணமும் சுதந்திரத்திற்குப் பிந்தைய கென்யாவில் மோதி ஆடுகின்றன.

Secret Lives and Other Stories (1975)
கூகியின் வளர்ந்து வரும் குரலைக் காட்டும் ஆரம்பகால புனைகதை – ஆழமான அரசியல் அடித்தளங்களைக் கொண்ட தனிப்பட்ட கதைகள்.

கூகியின் இலக்கியக் கிளர்ச்சி வெறும் புனைகதை பற்றியது மட்டுமல்ல. அது மொழியை விடுவிப்பதைப் பற்றியது. பல ஆபிரிக்க அறிஞர்கள் அடையாளம் குறித்து தடுமாறிக் கொண்டிருந்தபோது, இங்கியூகி காலனிய முகமூடியைக் கழற்றி எறிந்துவிட்டு, மூதாதையர் மேளத்தை எடுத்தார். அவரது வாழ்நாள் முழுவதும் செய்த வேலை வெறும் எழுதுவது மட்டுமல்ல, விதிகள், கதைகள், மொழி, மற்றும் ஆபிரிக்காவின் கற்பனையை மீண்டும் எழுதுவதுமே ஆகும். அந்தப் பழைய சிங்கம் மறைந்துவிட்டது. ஆனால் அதன் கர்ஜனை இன்றும் எதிரொலிக்கிறது!

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

சமாதானம் என்பது ஒரு விருதல்ல என்பதை அவர் உலகிற்கு நினைவூட்டினார்.

அது உழைத்துப் பெறுவது.

அதற்காகப் போராட வேண்டும்.

சில வேளைகளில் அதை நிராகரிப்பது தீர்மானத்தில் உள்ள நியாயமற்ற தன்மையை எடுத்துக் காட்டுவதாகும்.

கீஸிஞ்சர் பதக்கங்களைச் சேர்த்துக் கொண்டு சென்று சிலியிலும், கம்போடியாவிலும், கிழக்கு திமோரிலும் (Chile, Cambodia and East Timor) மேலும் பல கொலைகளை அரங்கேற்றினார்.

லே டக் தோ வியட்நாமிய தலைநகரம் ஹனோய் (Hanoi) திரும்பினார்.

யுத்தத்தை நோக்கி.

அழிவுகளை நோக்கி.

மக்கள் சமாதானம் ஆடம்பரமாக வரும் என ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

அவர் ஒரு சமாதானவாதி அல்ல.

அவர் ஒரு புனிதர் அல்ல.

வியட்நாமிய புரட்சிவாதியாகிய அவர், சமாதானம் ஒருபோதும் பொய்களின் மீது கட்டியெழுப்பப்படுவதில்லை என்பதை அறிவார். அத்துடன், நேர்மையாக எதிர்ப்பதை விட அமைதியாக இருப்பது அதிக ஆபத்தானது என்பதையும் அவர் அறிவார்.

இந்த வியட்நாமியரைப் போல நோபல் பரிசை நிராகரித்த வேறு எவரும் இல்லை.

அவரது சந்ததியினர் யப்பானியர்களையும், பிரெஞ்சுக்காரர்களையும், அமெரிக்கர்களையும் தோற்கடித்துள்ளனர்.

ஒரு மனிதனைப் பொறுத்தவரை அவனது போராட்டம், கௌரவம், வரலாறு என்பனவற்றுக்கு மேற்குலகின் மதிப்பீடு தேவையில்லை.

மற்றவர்கள் சக்கரவர்த்தியின் மேசையில் ஆசனங்கள் பெறுவதற்காக கெஞ்சி நிற்கையில் அவர் அதை விட்டு விலகிச் சென்றார்.

ஏனென்றால், இந்த உலகம் சிலவற்றை மறக்காது வைத்திருக்கும் என்று அவருக்குத் தெரியும்.

நீதி இல்லாமல் சமாதானம் இல்லை.


ஞாபகார்த்தம் இல்லாமல் நீதி இல்லை.

உன்னை அழிக்க முற்படும் அமைப்பிடமிருந்து விருதுகள் பெறுவது கௌரவமானதல்ல.
லே டக் தோ நிராகரித்தமை சமாதானத்தை சிறுமைப்படுத்துவதல்ல.

இது சமாதானம் என்னத்தைக் கோருகின்றது என்பதற்கான ஒரு நினைவூட்டலாகும்.

வரலாறு அவரை பரிசு பெற்றவர் என்பதை விட அதற்கும் மேலான அபூர்வமானவராக போற்றுகின்றது.

# ஜே.வி.பியும் புலிகளும் இரட்டையர்கள்!




அமெரிக்க உள்நாட்டுப் போரில் 650,000 பேர் இறந்ததை நினைவுபடுத்திப் பாருங்கள். அது பிரிவினையைத் தடுத்தல், ஒன்றியத்தைப் பாதுகாத்தல், அடிமைத்தனத்தை ஒழித்தல் என்பனவற்றைக் குறிப்பிடவில்லையா?

சீனாவில் ஒருபுறம் யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போர் இருந்தபோதிலும், மறுபுறம் உள்நாட்டுப் போராகவும் இருந்த சீனப் புரட்சியை நினைத்துப் பாருங்கள். அது பிற்போக்குவாத சர்வாதிகாரி சியாங் கை–ஷேக்கை நினைவுபடுத்தவில்லையா?

1975இல் வியட்நாமின் வெற்றி அமெரிக்க ஏகாதிபத்திய கைப்பாவைகளுக்கு எதிரான தேசிய விடுதலையைக் குறிப்பிடவில்லையா?

இரண்டாம் உலகப் போரின் 80ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகையில் நாஜி பாசிசத்தைக் குறிப்பிடத் தவறினால் எப்படி இருக்கும்?

ஆனால், 2025 மே 19 அன்று ஜனாதிபதியும் ஆயுதப்படைகளின் பிரதான தளபதியுமான அனுர குமார திசாநாயக்க போர் நினைவுத்தூபியின் முன்னால் நிகழ்த்திய உரையில், சக்தி வாய்ந்த பிரபாகரனின் பிரிவினைவாதப் பயங்கரவாதத்தை இலங்கை இராணுவம் தோற்கடித்ததைக் குறிப்பிடத் தவறி விட்டார்.

இலங்கை இராணுவம் தனது சொந்தப் பிரதேசமான வன்னிக் காடுகளில் தீர்க்கமாகப் போராடி எதிரியைத் தோற்கடித்தது எல்லா நேரங்களிலும் பெருமைப்பட வேண்டிய விடயமல்லவா?

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் உரையின்படி, பிரபாகரனிடம் சரணடைவதற்கு அல்லது தோற்பதற்குப் பதிலாக, எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றதன் மூலம் எதையும் அடையவில்லை என்றாகிறது.

அனுரவுக்கு இலங்கையின் நீண்ட வரலாற்றில் கணிக்கக்கூடிய வெற்றி எதுவும் இல்லை. அதனால் அவருக்கு கொண்டாடுவதற்கும் எதுவும் இல்லை.

*டாக்டர் தயான் ஜெயதிலக்க*

ஒரு நாட்டின் குடிமக்கள் இரத்தம் சிந்துவதை வெறுப்பதற்காக அனுர குமார திசாநாயக்கவை நாம் பாராட்டுவோம்!

அப்படியானால் ஜே.வி.பியினால் படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான இடதுசாரிகள், அப்பாவி பொதுமக்கள், மாணவர் தலைவர் தயா பத்திரன, விஜய குமாரதுங்க, பேராசிரியர் கிளாடிஸ் ஜெயவர்த்தன, வாக்காளர் அட்டைகளை விநியோகித்த அரச சிற்றூழியர்கள் வரை என்ன நடந்தது? ஜே.வி.பியின் 60ஆவது ஆண்டு நினைவு நாளில் அவர்களைக் கொன்றது குறித்து ஏன் ஒரு வருத்தம் கூடத் தெரிவிக்கப்படவில்லை?

ஜே.வி.பியின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பேசிய அனுர குமார திசாநாயக்க, தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சித் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றிருந்தாலும், பெரும்பான்மை பெறாத ஏனைய சபைகளையும் தாமே ஆள வேண்டும் என்று சொன்னார்.

ஆக்ரோசமான அவரது இந்தக் கருத்து, ஜே.வி.பியின் வரலாறு மற்றும் மனநிலையில் வேரூன்றிய அரசியல் ஏகபோக கருத்து நிலை இன்னமும் விட்டுப் போகவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. இது ஒரு சர்வாதிகாரமான போக்காகும்.

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளில் ஏற்பட்ட பின்னடைவுக்கே அவர்கள் இப்படிப் பயப்படுகிறார்கள் என்றால், எதிர்காலத்தில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் பின்னடைவு ஏற்பட்டால் அவர்கள் எப்படியெல்லாம் செயற்படக்கூடும்?

இலங்கை வாழ் பொதுமக்களின் முழுமையான உரிமை மீட்பு மற்றும் இலங்கையின் முழுமையான ஜனநாயகமயமாக்கல் என்பனவற்றுக்கு மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுவது கட்டாயமாகும்.

ஆனால், ஜே.வி.பியின் 60ஆவது ஆண்டு விழாவில் பேசிய அனுர குமார திசாநாயக்கவும், பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவும், நடந்து முடிந்த தேர்தல்களில் ஜே.வி.பி. 'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி' எனக் கருதுகிறார்கள். அதாவது, மீண்டும் மாற்றங்கள் ஏற்படக்கூடிய பல கட்சி ஜனநாயகத் தேர்தல்களாக அவற்றை அவர்கள் பார்க்கவில்லை. ஒருபோதும் மாற்ற முடியாத ஒரு வெற்றியாகவே அவர்கள் தங்கள் வெற்றியைப் பார்க்கின்றனர். பழைய ஜனநாயக முறையை நசுக்கிச் சீரமைக்க வேண்டும் என்பதே அவர்களது நிலைப்பாடாகும்.

எதிர்காலத்தில் எதிர்க்கட்சிகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக, ஒத்திகையாக உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தை ஏகபோகமாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே அனுர குமார திசாநாயக்கவின் நிலைப்பாடாகும்.

ஜனநாயகக் கண்ணோட்டத்தில் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணிகள் இயல்பானவை. பிரான்சில் நடந்த தேர்தலில் ஜீன்–லூக் மெலன்சோனின் இடதுசாரிக் கட்சி தனிப்பெரும் கட்சியாக வந்தது. ஆனால் அது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை ஏற்படுத்தத் தவறியதால் அரசாங்கத்தை அமைக்க முடியவில்லை.

ஜே.வி.பியும், தேசிய மக்கள் சக்தியும், அனுர குமார திசாநாயக்கவும் பன்மைத்துவம், ஜனநாயக அரசியல் நடைமுறைகள் போன்ற நெறிமுறைகளுடன் பரிச்சயமற்றவர்கள். ஜே.வி.பியின் 60ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் தேசிய மக்கள் சக்தியை ஜே.வி.பி. விழுங்கி விட்டதை எடுத்துக் காட்டியது. இப்பொழுது தேசிய மக்கள் சக்தி ஜே.வி.பியின் கைப்பாவை மட்டுமே.

ஜே.வி.பியின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய அனுர குமார திசாநாயக்க, ஜே.வி.பியின் பலத்துக்கான இரகசியமான மூன்று காரணிகள் ‘மனச்சாட்சி, தைரியம், நடைமுறை அறிவு’ எனக் குறிப்பிட்டார்.

அவரது மனச்சாட்சி, தைரியம், நடைமுறை அறிவு என்பன தயா பத்திரான, விஜய குமாரதுங்க, நந்தன மாரசிங்க, ஜாமிஸ் அத்துகல உட்பட பல நூற்றுக்கணக்கான இடதுசாரிகளைக் கொன்றது பற்றி என்ன சொல்கிறது? உண்மையில் ஜே.வி.பி. புலிகளின் இரட்டையர் ஆகும்.

ஜே.வி.பியின் தத்துவவியலாளர் பிமல் ரத்னாயக்க ஜே.வி.பியின் 60ஆவது ஆண்டு விழாவில் பேசவில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தியின் தத்துவவியலாளராக அறியப்பட்ட ராமிந்து பெரேரா ‘தத்துவார்த்த’ உரையை வழங்கினார். அவர் ஜே.வி.பி. வெற்றியின் தனித்துவமான காரணிகளாக பின்வரும் மூன்று விடயங்களைக் குறிப்பிட்டார்.

1. சோவியத் யூனியன் மற்றும் சீனா போன்ற சர்வதேச சோசலிச மையங்களுடன் அணிவகுத்த இடதுசாரிக் கட்சிகளைப் போலல்லாமல், ஜே.வி.பி. தனித்துவமாக ‘லங்கா கோட்பாட்டை’ ஏற்றுக்கொண்டது.

2. ‘முற்போக்கான தேசிய முதலாளித்துவ’ சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும், ‘பிற்போக்குத்தனமான’ ஐக்கிய தேசியக் கட்சியையும் முன்னிறுத்திய பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளைப் போலல்லாது, ஜே.வி.பி. இரண்டு கட்சிகளையும் பிற்போக்கானது என்று கருதியது.

3. உலகெங்கணும் உள்ள இடதுசாரிக் கட்சிகள் மற்றைய கட்சிகள் மற்றும் வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து ஐக்கிய முன்னணிகளை அமைத்தது போலல்லாமல், ஜே.வி.பி. தனித்துவமான முறையில் வெகுஜனத்தன்மை கொண்ட தேசிய அரசியல் இயக்கத்தை உருவாக்கியது. அவை பற்றிப் பார்ப்போம்:

1. இலங்கை இடதுசாரிகள் பல நாடுகளில் உள்ளவர்களைப் போலவே மொஸ்கோவுக்கும் பீஜிங்கிற்கும் இடையில் துருவப்படுத்தப்பட்டனர் என்றாலும், மூன்றாவது மையமும் இருந்தது. ஃபிடல், சே, கியூபா, முக்கோண மாநாடு மற்றும் OLASஎன்பன இருந்தன. இன்னும் பரந்த அளவில் உலக சோசலிச இயக்கத்தில் மூன்றாவது அணி இருந்தது. உதாரணமாக, கியூபா, வியட்நாம், வட கொரியா போன்ற சோசலிச நாடுகளும், இந்திய மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, யப்பானிய கம்யூனிஸ்ட் கட்சி, ஏறக்குறைய எல்லா லத்தீன் அமெரிக்க இடதுசாரிக் கட்சிகள் என்பன அதற்குள் அடங்கும்.

இந்த மூன்றாவது அணி ஒரு கருத்தியல், சித்தாந்த, மூலோபாய நிலைப்பாட்டைப் பகிர்ந்து கொண்டது. இதை நாம் “முக்கோண மார்க்சியம்” என்று அழைக்கலாம்.

ஆனால், எந்த விதத்திலும் ஜே.வி.பி. இந்தக் கருத்துகளை ஆதரித்ததோ, இந்த அணியைச் சேர்ந்ததோ அல்ல. ஜே.வி.பியின் போக்கை ஒரு பிறழ்ச்சி என்று சொல்லலாம். அது இன்னமும் அப்படியே உள்ளது.

2. சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி பற்றிய பாரம்பரிய இடதுசாரிகளின் கண்ணோட்டம் தவறாக இருந்தது உண்மைதான். இருப்பினும், பழைய இடதுசாரிகளின் அழிவுக்கு அது முக்கிய காரணம் அல்ல. சமூக ரீதியிலான புறநிலைக் காரணியே அதற்குக் காரணமாகும். 1970இற்குப் பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கவுடன் கூட்டணி வைத்ததினால் லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவு போல ஜே.வி.பிக்கு ஏற்படவில்லை.

ஆனால், ஜே.வி.பி. ஏனைய அரசியல் கட்சிகளுடன் கூட்டணி வைக்காவிட்டாலும், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதுடன், வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களின் விதி முறைகளையும் மறு பேச்சு இல்லாமல் ஏற்றுக் கொண்டுள்ளது. அத்துடன், இந்திய பெரு மூலதனத்துடனும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

3. ஒரு பாரம்பரிய ஐக்கிய முன்னணியை விட ஒரு தனித்துவமான தேசிய வெகுஜன அரசியல் இயக்கத்தை ஜே.வி.பி. கட்டியெழுப்பியது என்பது ஒரு பொய்யான கூற்றாகும். ஜே.வி.பி. அரசியல் அரங்கிற்கு வருவதற்கு பல தசாப்தங்கள் முன்னே இலங்கையின் இடதுசாரிகளும் வலதுசாரிகளும் அத்தகைய மாதிரியைக் கொண்டிருந்தனர்.

மேற்கில் எழுந்த மார்க்சியத்தை இலங்கையின் யதார்த்தத்துக்கு ஏற்ப ஜே.வி.பி. பயன்படுத்தியது என்பதே ரமிந்து பெரோராவின் மையக் கருத்தாகும்.

காலனித்துவம் மற்றும் தேசிய விடுதலை சம்பந்தமாக லெனின் முன்வைத்த மார்க்சிய கருத்துகளுக்கு மேலோட்டமான தலையசைப்பைச் செய்த ரமிந்து பெரேரா, அதன் பின்னர் மாவோ சேதுங், ஹோ சி மின், அன்ரோனியோ கிராம்சி, ஃபிடல் கஸ்ட்ரோ மற்றும் சே குவேரா ஆகியோரை முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டு ரோகண விஜேவீரவுக்கு மார்க்சிய பரிசை வழங்குகிறார்.

சுமார் 40 ஆண்டு காலமாக ஜே.வி.பியின் சொற்பொழிவுகளில் உலகளாவிய இடதுசாரி இயக்கத்தினதும், அதன் தலைவர்களினதும், கருத்துக்கள், திட்டங்கள், அனுபவங்கள் எதுவுமே இடம் பெறுவதில்லை.

மார்க்சியத்தை இலங்கையில் நடைமுறையில் பயன்படுத்துவதற்கான பணியில் ஜே.வி.பி. மார்க்சியக் கருத்துகளின் உலகளாவிய தன்மையைக் கைவிட்டுவிட்டு, இலங்கை விதிவிலக்கு வாதத்திற்கு ஆதரவாக, குழந்தையைக் குளிப்பாட்டிய நீரை வீசுவதற்குப் பதிலாக குழந்தையையும் சேர்த்து வீசியதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

மாவோ குறிப்பிட்ட ‘மூன்று மந்திரக் கோல்களில்’ ஒன்றான ஐக்கிய முன்னணி பற்றிய மார்க்சியக் கோட்பாடு, லெனின் மற்றும் 1921இல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் அகிலத்தின் 3ஆவது மாநாட்டில் இருந்து உருவானது.

ஐக்கிய முன்னணி இல்லையேல் பாசிசத்தின் மீது வெற்றி இல்லை, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டங்கள் இல்லை.

சோவியத் யூனியனில் சோசலிசம் வீழ்ச்சியடைந்த பிறகு ‘மந்திரக்கோல்’ இலத்தீன் அமெரிக்காவில் இடது

ஜனரஞ்சகமாக மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் திரும்பியது.

ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சிக் காலகட்டத்திலேயே இலத்தீன் அமெரிக்காவில் 'புதிய முன்னணி' பிறந்தது. உருகுவேயில் அமைக்கப்பட்ட '∴ப்ரென்ட் ஆம்ப்லியோ' (பரந்த முன்னணி) அரசியல் கட்சிகளின் முன்னணியாக இருந்தது. 1971இல் அலெண்டேயின் சிலியில் ஒரு நீண்ட சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருந்த ∴பிடல் கஸ்ட்ரோ, ஆயுதமேந்திய MIR முதல் சோசலிஸ்ட்டுகள், கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் முற்போக்கான கத்தோலிக்கர்கள் வரை இடதுசாரிகளின் பரந்த ஐக்கியத்தை வலியுறுத்தினார்.

1965 முதல் 2025 வரை 60 ஆண்டுகளாக ஜே.வி.பி. அடிப்படைவாத நிலைப்பாட்டில் நின்று வெறித்தனமான முறையில் ஐக்கிய முன்னணிகளை நிராகரித்து வந்துள்ளது.

விஜேவீரவில் தொடங்கி ஜே.வி.பி. எந்தவொரு சர்வதேசிய, பிராந்திய அமைப்புகளிலும் இடம் பெறவில்லை. அப்படியானால் ஜே.வி.பி. எப்படி வென்றது? அது ஏன் தோற்கும்?

'ஜ∴ப்னா மொனிட்டர்' இதழில் எனது 11 பக்க நேர்காணலில் விடுதலைப் புலிகளின் தோல்வி மற்றும் தோல்விக்கான காரணங்களை நினைவு கூர்ந்தேன். மக்கள் யுத்தக் கோட்பாடு மற்றும் நடைமுறைகளை புலிகள் கடுமையாக காலில் போட்டு மிதித்தார்கள் என்பதை அப்போது குறிப்பிட்டேன்.

அதேபோல, பின்வருவனவற்றை நான் துணிந்து கூறுகிறேன்:
இலங்கையைத் தவிர வேறு எங்கும் ஜே.வி.பி. வெற்றி பெற்றிருக்க முடியாது. ஏனெனில், நாட்டின் சமூக – கலாச்சார – அறிவுசார் சூழலியல் 70 ஆண்டுகளில் பெரிதும் மாறிவிட்டது. 30 ஆண்டுகளுக்கு முன்னர் எனது முதல் புத்தகத்தில் நான் அடையாளம் கண்டதைப் பின்வருமாறு எழுதினேன்:

"....இலங்கையில் 1956 இற்குப் பிந்தைய நிலைமை மூன்றாம் உலக நாடுகளில் தனித்துவமான துயரமானது. நமது முதலாளித்துவ எதிர்ப்பு இளைஞர்களுக்கு பரவலாகப் பேசப்படும் தாய்மொழி இல்லை.
காலனித்துவவாதியின் மொழியும் தெரியாது. ஜே.வி.பி. இந்த அறியாமையில் செழித்து வளர்கிறது. உலக இலக்கியத்தின் மனிதாபிமான செல்வாக்கோ, மார்க்சியத்தின் அறிவியல் செல்வாக்கோ இல்லாத சிங்கள இளைஞர்களின் உலகக் கண்ணோட்டத்தையோ..."

(அத்தியாயம் 9, "ஜே.வி.பி. மற்றும் இலங்கை ஒரு ஜனநாயகத்தின் துன்பங்கள், முடிவடையாத போர், நீடித்த நெருக்கடி". – விகாஸ் பப்ளிசிங் ஹவுஸ், புது டெல்லி, 1995)

ஜே.வி.பி. தனது விதிவிலக்குவாதத்தால்தான் இலங்கையில் வெற்றி பெற்றுள்ளது. ஜே.வி.பி. முன்னர் இரணடு முறை செய்தது போல அது அறிவியல் பூர்வமானதாக இல்லாதபடியால் அது நிச்சயம் தோற்கும்.

ஜனநாயகம் மற்றும் மார்க்சியத்தின் உலகளாவிய இயக்கவியலை அது புரிந்து கொள்ளத் தவறியுள்ளதுடன், அதை மறுப்பதால் அதன் தோல்வி நிச்சயம்.

(டாக்டர் தயான் திலக்க இலங்கையின் முன்னாள் இராஜதந்திரியும், மார்க்சியம் மற்றும் தேசிய–சர்வதேசிய ஆய்வாளரும் ஆவார். அவர் கொழும்பிலிருந்து வெளியாகும் Daily FT என்ற பத்திரிகையில் "எனது நோக்கு" என்ற தலைப்பில் எழுதிய ஒரு கட்டுரையில் தெரிவித்த கருத்துக்கள் இவை)

# "பட்ரிஸ் லுமும்பாஆபிரிக்க சுதந்திரத்தின் சின்னம்"

**இ**வ்வாறு ரஸ்யாவின் RT செய்திச் சேவைக்கு அளித்த ஒரு பேட்டியில் கொங்கோவின் விடுதலைப் போராட்ட வீரரும், பெல்ஜிய ஏகாதிபத்தியவாதிகளால் படுகொலை செய்யப்பட்டவருமான பட்ரீஸ் லுமும்பாவின் மகள் ஜூலியானா லுமும்பா கூறியிருக்கிறார்.

மேலும் கூறிய அவர், "லுமும்பாவின் கொள்கைகள் நாட்டின் எல்லைகளுக்கு அப்பாலும் எதிரொலிக்கின்றன. அவை கண்ணியம், இறையாண்மை, மற்றும் உண்மையான சுதந்திரத்திற்கான தேடலில் ஆபிரிக்க கண்டத்தையே ஒருங்கிணைக்கின்றன" என்றார்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் முன்னாள் கலாச்சார அமைச்சரான ஜூலியானா, "எனது தந்தை உண்மையிலேயே கண்ணியத்தின் சின்னமான நபர், விடுதலையை அடையாளப்படுத்தும் ஒருவர், ஆபிரிக்கா சொந்தக்காலில் சுதந்திரமாக நிற்பதைப் பார்க்க விரும்பியர்" எனவும் கூறினார்.

"அவர் தனியாக இல்லை. நமது சுதந்திரத்தின் ஸ்தாபகத் தந்தைகளின் ஒரு பகுதியாகும். நீதி மற்றும் சுதந்திரத்துக்கான எனது தந்தையின் போராட்டம் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றது. குறிப்பாக சோவியத் யூனியனின் ஆதரவைப் பெற்றது. காலனித்துவம், நவ காலனித்துவம் என்பனவற்றுக்கு எதிரான சுதந்திரத்தின் அடையாளமாக அவர் இருந்தார்" என்றும் கூறினார்.

சோவியத் யூனியன் தனது மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகத்துக்கு "பட்ரிஸ் லுமும்பா பல்கலைக்கழகம்" எனப் பெயர் சூட்டியதை சுட்டிக்காட்டி நன்றி தெவித்த அவர், "இன்றும் அந்தப் பெயர் நீடித்து நிலைத்து நிற்கிறது, கொங்கோ உட்பட பல ஆபிரிக்க நாடுகளின் ஆயிரக்கணக்கான மாணவர்களை பல துறைகளிலும் நிபுணர்களாகப் பயிற்றுவித்து வருகிறது" எனத் தெரிவித்தார்.

தனது தந்தையின் பாரம்பரியத்தை அங்கீகரித்ததிற்காக ரஸ்ய மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் ஜூலியானா நன்றி தெரிவித்தார்.

தனது தந்தை பட்ரிஸ் லுமும்பாவின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி ஜூலியானா இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார்.

(1925 இல் பிறந்த பட்ரிஸ் லுமும்பா 1961 இல் பெல்ஜிய காலனித்துவவாதிகளால் கொல்லப்பட்டு, உடல் கூடக் கிடைக்காதபடி அமிலத்தால் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டார்.

அவர் பெல்ஜியத்திடமிருந்து தனது தாய்நாடான கொங்கோவை விடுவிப்பதற்காக கடுமையான சுதந்திரப் போராட்டத்தை நடத்தி வெற்றி கண்டார். சுதந்திர கொங்கோவுக்கு நடத்தப்பட்ட தேர்தலில் வெற்றி பெற்று, ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட முதல் பிரதமரானார்.

கொங்கோவில் நவ காலனித்துவ முறையில் பெல்ஜிய அதிகாரத்தைத் தொடர அவர் இடமளிக்காததால், பெல்ஜிய காலனித்துவவாதிகளால் அவர் நயவஞ்சகமான முறையில் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டார்)

# எதிர்க்கட்சிகளுக்கு அமைச்சர் பிமல் ரத்னாயக்க விடுத்துள்ள சவால்!



நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சபை முதல்வரும், அரசாங்கத்தின் சிரேஸ்ட அமைச்சர்களில் ஒருவருமான பிமல் ரத்னாயக்க, 2025 ஜனவரியில் கொழும்பு துறைமுகத்தில் இருந்து சுங்கச் சோதனை எதுவுமின்றி 323 சிவப்பு கொடி கொண்ட கொள்கலன்களை விடுவித்தது சம்பந்தமாக அரசாங்கம் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சொல்வதை விடுத்து, அது சம்பந்தமாக பொலிசாரிடம் முறைப்படியான முறைப்பாட்டைச் செய்யும்படி கூறியுள்ளார்.

“இந்த விடயத்தில் நான் ஏதாவது தவறு செய்திருந்தால் என்னைச் சிறையில் அடையுங்கள்” என எதிர்க்கட்சியினரைப் பார்த்துக் கூறிய பிமல் ரத்னாயக்க, கொள்கலன்களை விடுவிப்பது போன்ற விடயங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் தனக்குக் கிடையாது என்றும் கூறினார்.

எதிர்க்கட்சிகள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அவரது கூற்றை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது.

அமைச்சர் ரத்னாயக்க தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்துள்ளார் என்பதை நிரூபிக்கக்கூடிய ஆதாரங்கள் இருந்தால், அவர் சொல்வது போல எதிர்க்கட்சியினர் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இருப்பினும் ஒரு சக்தி வாய்ந்த அமைச்சருக்கு எதிராக முறைப்பாடு செய்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பது ஒரு கற்பனையே. ஏனெனில், தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாச்சாரம் இன்னமும் நம் நாட்டில் முடிவுக்கு வரவில்லை.

உதாரணமாக, பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (முன்னாள் எஸ்.டி.ஐ.ஜி.) செனவிரத்ன மது போதையில் வாகனம் ஓட்டிய போது ஏற்படுத்திய விபத்தில் தன் மீதான வழக்கில் இரண்டு கடுமையான குற்றச்சாட்டுகளை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி கைவிடச் செய்திருக்கிறார் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

மேதினத்தன்று தேசிய மக்கள் சக்தியின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் தாம் பயணம் செய்த பேரூந்துகளை போக்குவரத்துச் சட்டங்களை மீறி தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நிறுத்தி உணவு சாப்பிட்டது சம்பந்தமாக பொலிசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என பொலிசார் கருதுவார்களாக இருந்தால், அமைச்சர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மீன்வளத்துறை அமைச்சராக இருந்தபோது, அமைச்சின் ஒரு திட்டத்தை சட்ட விரோதமாக ஒரு வெளிநாட்டு நிறுவனத்துக்குக் கொடுத்து அரசாங்கத்துக்கு 26.3 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ளார். சேனாரத்ன அதிகாரத்தில் இல்லாதபடியால் சட்ட நடவடிக்கையை எதிர் கொள்கிறார்.

ஆனால், தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் வரை, தேசிய மக்கள் சக்தியின் எந்தவொரு சக்தி வாய்ந்த அரசியல்வாதியும் சட்டத்துக்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கருதும் அளவுக்கு நாம் அப்பாவியாக இருக்கக்கூடாது. எதிர்காலத்தில் வரக்கூடிய ஒரு அரசாங்கமே அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவது குறித்துப் பரிசீலிக்க முடியும்.

இலங்கை போன்ற நாடுகளில் தேர்தல்களினால் ஏற்படும் அதிகார மாற்றங்களால் சிலர் ஆதாயமடைகின்றனர். கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் சிறீலங்கா பொதுஜன பெரமுன – ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வெற்றி பெற்றிருந்தால், ரம்புக்வெல்லவைத் தவிர மற்றைய அரசியல்வாதிகள் அனைவரும் பாதுகாப்பாக இருந்திருப்பார்கள்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது போட்டியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு விலை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆனால், தற்போது எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அடுத்த ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் பல்வேறு முறைகேடுகள் சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்ட தற்போதைய ஆட்சியாளர்களை இதேபோல கையாளுவார்கள்.

(யூலை 12ஆம் திகதிய ‘த ஐலண்ட்’ பத்திரிகையில் வந்த ஆசிரியர் தலையங்கத்தின் முக்கியமான பகுதிகள்)

---

எம்முடைய இலக்கியமும் கலையும் அடிப்படையாகத் தொழிலாளர்கள், விவசாயிகள், படைவீரர்களுக்கானவை. பரவலாக்குதல் என்பதன் பொருள் அவர்களிடம் பரவலாக்குதல் தராதரங்களை உயர்த்துதல் என்பதன் பொருள் அவர்களுடைய தற்போதைய நிலையிலிருந்து, அந்த மட்டத்திலிருந்து முன்னேற்றுவது என்பதாகும். அவர்களுக்குச் சாதகமானதும், அவர்களால் உடனே ஏற்றுக் கொள்ளக் கூடியதும் எதுவோ அதையே நாம் பரவலாக்க வேண்டும். எனவே, அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு முன், அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளும் பணி இருக்கிறது. தராதரங்களை உயர்த்துவதற்கு இது இன்னும் அதிகமாகப் பொருந்தும்.

உயர்த்தத் தொடங்குவதற்கே அடித்தளம் தேவை. ஒரு வாளித் தண்ணீரை எடுத்துக் கொள்வோம். அதைத் தரையிலிருந்து தானே மேலே இழுக்கிறோம்? அந்தரத்திலிருந்தா இழுக்கிறோம்? அப்படியானால், இலக்கியமும் கலையும் எந்த அடித்தளத்திலிருந்து உயர்த்தப்படுவது? நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் அடித்தளத்திலிருந்தா? முதலாளி வர்க்கங்களின் அடித்தளத்திலிருந்தா? சிறுமுதலாளி வர்க்க அறிவுஜீவிகளின் அடித்தளத்திலிருந்தா? இல்லை, இவை எதிலிருந்தும் அல்ல, பரந்துபட்ட தொழிலாளர், விவசாயிகள், படை வீரர்களின் அடித்தளத்திலிருந்தே.

–மாவோ

**முன்பக்கத்தொடர்ச்சி…**

எப்படியிருந்த போதிலும், இவர்களின் சமூகக் கண்ணோட்டம் எத்தகையது என்பது அறிவு பூர்வமாக மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவதில்லை.

உதாரணத்துக்கு தமிழ் மக்கள் சார்பாக தேசியவாதியாகக் குறிப்பிடப்படும் ஆறுமுகநாவலரை எடுத்துக் கொண்டால், அவர் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் ஆற்றிய சேவையில் மாற்றுக் கருத்து எவருக்கும் இல்லை. ஆனால் அவரது சமூகக் கண்ணோட்டம் என்ன?

அவர் தமிழ் சமூகத்தில் ஆண்டாண்டு காலமாக நிலவிய நிலப்பிரபுத்துவ அடிப்படையிலான சாதி அமைப்பு முறையையும், பழமைவாதத்தையும், மூட நம்பிக்கையையும் பின்பற்றி ஒழுகும்படி வலியுறுத்திய சனாதனவாதியாவார்.

அதன் காரணமாக இன்று விழிப்படைந்து வரும் தமிழ் சமூகம் அவரை முற்றுமுழுதாக நிராகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. அப்படி நிராகரிக்கும் போது, அவர் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் வழங்கிய பங்களிப்பும் சேர்த்தே நிராகரிக்கப்படுகிறது. இது எமது கல்விக் கண்ணோட்டத்தில் உள்ள குறைபாட்டை எடுத்துக் காட்டவில்லையா?

கல்வித்துறையில் புலமை ரீதியாகவும், கட்டமைப்பு ரீதியாகவும் காலத்துக்கேற்ற மாற்றங்கள் செய்வதில் தவறு இல்லை. சொல்லப் போனால் அது அவசியமானதும் கூட. ஆனால் தற்போது அரசாங்கம் செய்யவுள்ள மாற்றங்கள் எத்தகையது என்பதுதான் கேள்வி.

அதாவது, அரசாங்கம் செய்யவுள்ள மாற்றங்களுக்கான நோக்கம் என்ன? அவை என்ன வகையான அடிப்படையைக் கொண்டிருக்கும்? அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்கள் என்ன? என்ற கேள்விகள் முக்கியமானவை.

வெளிவந்துள்ள தகவல்களின் அடிப்படையில் பார்க்கையில், புதிய கல்வித் திட்டத்தில் வரலாறு, புவியியல் போன்ற முக்கியமான பாடங்கள் இனிமேல் இருக்காது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையானால், இலங்கையின் வரலாறும், உலக வரலாறும் தெரியாது வளரும் மாணவன் இருளுக்குள் அல்லவா மூழ்கடிக்கப்படுவான்?

வருங்காலத்தில் எல்லா ஆசிரியர்களும் பட்டதாரிகளாக இருப்பார்கள் என கல்வி அமைச்சராகவும் இருக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்திருக்கிறார். அப்படியானால் வருங்காலத்தில் ஆசிரியர் துறையில் சிறந்த பயிற்சிகளை வழங்கி வந்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும், தேசிய கல்வியியல் கல்லூரிகளும் இருக்காதா? எமது அனுபவத்தின்படி, பட்டதாரி ஆசிரியர்களை விட ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஒருபடி உயர்ந்து அல்லவா நின்றார்கள்!

அரசாங்கம் என்ன நோக்கத்துக்காக இப்பொழுது கல்விச் சீர்திருத்த முயற்சியை ஆரம்பித்திருக்கிறது என்பது மாணவர்களுக்கோ, கல்விசார் ஊழியர்களுக்கோ, பொது மக்களுக்கோ இதுவரை விளக்கப்படவில்லை. அது மட்டுமல்ல, நாடாளுமன்ற (அரசாங்க கட்சி உட்பட) உறுப்பினர்களுக்குக்கூட விளக்கப்படவில்லை.

ஆனால், "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்பது போல, "கல்விச் சீர்திருத்தத்துக்கு எவ்வித அரசியல் நோக்கமும் இல்லை" என கல்வி அமைச்சரான பிரதமர் கூறியிருப்பது சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது.

இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மக்கள் சந்தேகிப்பதற்கு நியாயம் இருக்கிறது. ஏனெனில், தாம் ஆட்சிக்கு வந்தால் முன்னைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்த அனைத்து உடன்படிக்கைகளையும் இரத்துச் செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு எதிர்மாறாக முன்னைய அரசாங்கம் நாணய நிதியத்துடன் செய்த உடன்படிக்கைகளை அப்படியே தொடர்கிறார்கள்.

அதுபோல, இந்தக் கல்விச் சீர்திருத்த முயற்சிக்கும் அரசியல் நோக்கம் எதுவும் இல்லை என்று சொன்னாலும் அது பொய்யாகத்தான் இருக்கும்.

இந்தச் சீர்திருத்த முயற்சிக்கு இரண்டு நோக்கங்கள் இருக்கும் என மக்கள் சந்தேகிப்பதில் நியாயம் உண்டு. மக்களின் சந்தேகங்கள் இவைதான்:

ஒன்று, தங்களுக்கு விசுவாசமான எதிர்காலப் பிரசைகளை மாணவர் பருவத்திலிருந்தே உருவாக்குவது.

இரண்டாவது, சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளுக்கு ஏற்ப கல்வியமைப்பை மாற்றுவது.

அதாவது, ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் அடிப்பது.

---

**6ம் பக்கத்தொடர்ச்சி…**

சாம்பலில் இருந்து சோவியத் யூனியன் புத்துயிர் பெற்று எழுச்சி கொண்டது.

*1953* ஆம் ஆண்டு ஸ்டாலின் மறைந்த பொழுது சோவியத் யூனியன் அமெரிக்காவுக்கு இணையாக ஒரு வல்லரசாக வளர்ந்திருந்தது. இந்தியா உட்பட புதியதாக விடுதலை அடைந்த நாடுகளுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தது. ஸ்டாலின் மீது விமர்சனங்கள் இருக்கலாம். அவை அவரது தனிப்பட்ட குறைகள் அல்ல. முதல் சோசலிச சமூகம் நிர்மாணிக்கும் மகத்தான பணியில் உருவான குறைகள் அவை. எனினும் மார்க்சிய சித்தாந்தத்தை எந்த வகையிலும் ஸ்டாலின் நீர்த்துப் போகச் செய்யவில்லை. மாறாக அதற்கு தனது செழுமையான பங்கை செலுத்தினார் என்பதுதான் உண்மை. அதனால்தான் இன்றும் ஸ்டாலின் இலட்சோப இலட்சக்கணக்கான மக்களால் நினைவு கூரப்படுகிறார்.

---

**8ம் பக்கத்தொடர்ச்சி…**

எதிர்ப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவதுடன், வெறும் வார்த்தைகளிலிருந்து கூட்டு நடவடிக்கைகளை நோக்கி செல்வதற்கான திட்டவட்டமான வழிகளையும் வகுக்கும்," என்றார். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு மற்றும் அவரது அமைச்சரவையில் இருந்த முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் யோவ் கேலண்ட் ஆகியோரை இனப்படுகொலை குற்றச்சாட்டில் கைது செய்ய வேண்டும் என்று கடந்த ஆண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், அந்த உத்தரவை செயல்படுத்துவதும் இந்த கூட்டு நடவடிக்கைகளில் அடங்கும்.

---

ஒப்பீட்டளவில் முழுமையான அறிவு இரண்டு நிலைகளில் அமைகிறது. அதாவது இரு கட்டங்களில் உருவாகிறது. முதலாம் கட்டம் புலனறிவுக் கட்டம். இரண்டாம் கட்டம் என்பது பகுத்தறிவுக் கட்டம் என்பதாகும். புலனறிவுக் கட்டம் உயர்ந்த கட்டமாக வளர்வதுதான் பகுத்தறிவுக்கட்டமாகும்.

–மாவோ

# ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் மீண்டும் தாக்குதல்களை நடத்துவார்கள்!

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் மீண்டும் தாக்குதல்களை நடத்துவார்கள் என ‘நோ கோல்ட் வோர்’ (NO COLD WAR) அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானின் அணுசக்தித் திட்டத்தை முற்றிலுமாக அழிப்பதற்காக நடத்திய தாக்குதல்கள் தோல்வியடைந்த நிலையில் ஈரான் மீது அந்நாடுகள் மீண்டும் தாக்குதல்களை நடத்துவார்கள். அந்த தாக்குதலுக்கு அதிக காலம் எடுக்காது. எனினும் இந்த இரண்டாவது தாக்குதல் முயற்சியில் அவர்கள் வெற்றி பெறுவார்களா இல்லையா என்பது ஈரானின் எதிர்ப்பு மற்றும் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிரான பிற நாடுகளின் ஒன்றுபட்ட ஆதரவைப் பொறுத்ததே என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீன நிலத்தை ஆக்கிரமித்துள்ள, இஸ்ரேல் ஒருநாடாக உலகளவில் அங்கீகரிக்கப்படவில்லை. மேற்கு ஆசியா, வட ஆபிரிக்கப் பகுதிகளில் உள்ள நாடுகளை மிரட்டி பணிய வைக்கவும் அதன் மூலம் அப்பகுதியில் உள்ள எண்ணெய், இயற்கை எரிவாயு உள்ளிட்ட இயற்கை வளங்களை கொள்ளையடிக்கவும் அமெரிக்காவின் அடியாளாகவும் இராணுவ நிலையாகவுமே இஸ்ரேல் உள்ளது.

இந்நிலையில் அப்பிராந்தியத்தில் ஈரானின் வலிமையை மேலும் அதிகரிக்கும் வகையில் ‘பிரிக்ஸ்’ கூட்டணி செயல்படுகிறது. இந்தப் பொருளாதாரக் கூட்டணி அமெரிக்காவையும் அதன் டொலர் ஆதிக்கத்தையும் பலவீனப்படுத்தும் வேலையை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. மேலும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளை மட்டுமே நம்பி இருப்பதற்கு மாற்றான ஒரு பொருளாதாரக் கூட்டணியை உருவாக்கியுள்ளது.

மத்திய கிழக்கில் ஈரான் மட்டுமே இஸ்ரேலையும், அமெரிக்காவையும் உறுதியாக எதிர்க்கும் நாடாக உள்ளது. அதனை தகர்ப்பதற்காக ஈராக், லெபனான், சிரியா போன்ற நாடுகளைப் போல, ஈரானிலும் ஆட்சியை கவிழ்க்கும் வேலைகளை அமெரிக்காவும் இஸ்ரேலும் முன்னெடுத்து வருகின்றன.

காஸா, லெபனான் மற்றும் சிரியாவில் ஈரான் ஆதரவுடன் இயங்கி வருகின்ற இஸ்ரேல் எதிர்ப்பு இராணுவக் குழுக்களின் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் தாக்குதல்களை நடத்தி அக்குழுக்களின் போர்த் திறனை திட்டமிட்டு குறைத்த பிறகு, பலஸ்தீனர்களுக்கு மிகவும் சக்திவாய்ந்த ஆதரவாளராக உள்ள ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்ற நேதன்யாகுவின் நீண்டகால திட்டம் அரங்கேற்றப்பட்டது.




இத்தகைய சூழலில் ஈரானின் அணு உலைகளை அழிப்பதன் மூலமாக, அதன் வளர்ச்சியை அழிக்க அமெரிக்காவும் இஸ்ரேலும் எடுத்த முயற்சி படுதோல்வியடைந்துள்ளது. ட்ரம்ப் ஈரானின் அணு ஆராய்ச்சி கட்டமைப்புகளை முழுமையாக அழித்து விட்டோம் என கூறினாலும், அமெரிக்காவின் தீவிர ஆதரவுடன் செயல்படுகிற ஊடகங்களே அது உண்மையல்ல என கூறியுள்ளன. ஈரானும், எங்கள் அணு ஆராய்ச்சி கட்டமைப்பு முழுமையாக அழிக்கப்படவில்லை, ஆனால் சேதமடைந்துள்ளது. அதனை எங்களால் மீண்டும் முழுமையாக மறுகட்டமைப்பு செய்து விட முடியும் என தெரிவித்துள்ளது.

‘பிரிக்ஸ்’ கூட்டமைப்பு பொருளாதார ரீதியாக ஈரானுக்கு ஆதரவாக இருக்கிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் அவற்றின் இலக்குகளை அடையவில்லை. இதனால் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இரண்டாவது முறையாக ஈரானை தாக்குவார்கள். ஒருவேளை அந்த தாக்குதலில் அமெரிக்கா வெற்றி பெற்றால், இப்பிராந்தியத்தில் இஸ்ரேல் ஆட்சியை மேலும் பலப்படுத்தும். இதன் மூலமாக மேற்கு ஆசியாவில், தன்னை எதிர்த்து நிற்கும் அனைத்து நாடுகளையும் இஸ்ரேல் மூலம் அமெரிக்கா வழக்கம் போல அச்சுறுத்தும். குறிப்பாக ஈரான் மீதான தாக்குதல் மூலமாக ‘பிரிக்ஸ்’ கூட்டமைப்புக்கு ஒரு பெரிய பாதிப்பை உருவாகும்.

இறுதியாக, தற்போதைய நிலைமை இஸ்ரேலிய அணு ஆயுதங்களால் உலகின் முன்வைக்கப்பட்டுள்ள ஆபத்தைக் காட்டுகிறது. காஸா மற்றும் பிற இடங்களில் பாசிச வழிவகைகளைப் பயன்படுத்தி, இனப்படுகொலை செய்யும் இஸ்ரேலிய ஆட்சியின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கும், இஸ்ரேலைத் தடுத்து நிறுத்துவதற்குமான ஒரேயொரு வழி அணு ஆயுதங்களைப் பெறுவதுதான் என்ற முடிவிற்கு மேற்கு ஆசிய நாடுகள் தவிர்க்க முடியாமல் வரும்.

லிபியா மற்றும் ஈராக் போன்ற அணு ஆயுதத் திட்டங்களைக் கைவிட்ட நாடுகள் தாக்கப்பட்ட அதேவேளை, வட கொரியா போன்ற வெற்றிகரமாக அணு ஆயுதங்களை உருவாக்கிய நாடுகள் தாக்கப்படவில்லை என்பதை இந்த நாடுகள் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. இஸ்ரேலின் மரபு மற்றும் அணு ஆயுத அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் நாடுகள், இஸ்ரேல் ஒரு சிறியதொரு நாடு என்றும் இரண்டு அல்லது மூன்று அணுகுண்டுகளால் அழிக்கப்படலாம் என்பதை புரிந்து கொண்டுள்ளன. எனவே, இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் இருக்கும் வரை, ஏனைய மேற்கு ஆசிய நாடுகள் அவற்றைப் பெறுவதற்கு சில காலம் மட்டுமே ஆகும்.

எனவே, மேற்கு ஆசியாவிலும் வட ஆபிரிக்காவிலும் அணு ஆயுதமற்ற சூழல் அல்லது மனிதகுலத்திற்கு பெரும் அச்சுறுத்தலை முன்வைத்துள்ள உலகின் மிகவும் போரால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் ஒன்றான மேற்கு ஆசியா முழுவதும் அணு ஆயுதப் பரவலைத் தடுத்தல் என்பதில் ஒன்றைத் தெரிவு செய்தல் மட்டுமே முன்னோக்கி செல்வதற்கான ஒரேயொரு வழியாகும்.